உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி உ௨.] ரக்தாக்ஷி௵ வைகாசிமீ [பகுதி எ.

Vol. XXII. *May-June-1924.* No. 7.

## பாடாந்தரமும் பொருள்கோடலும்.

## இராமாவதாரம்.

—(●)—

### கடிமணப்படலம்.

"புயலுள மின்னுள பொருவின் மீனுள
இயன்மணி யினமுள சுடரி ரண்டுள
மயன்முதற் றிருத்திய மணிசெய் மண்டபம்
அயன்முதற் றிருத்திய வண்ட மொத்ததே"

இச்செய்யுளில், 'சுடரிரண்டுள' என்னும்பாடத்தைச் 'சுடர்களீன்றுள' எனப் பாடங்கொள்வாருமுளர். சுடரிரண்டுள என்னும் பாடம் பொருத்தமும் சிறப்பு மின்றாயினவன்றே? 'சுடர்களீன்றுள' என்னும் பாடங் கொள்ளத்தக்கது. இச்செய்யுள் சிலேடையுவமையாதலின் அதற்கேற்பப் பொருள்கொள்ளுமிடத்துச் 'சுடரிரண்டுள' என்னும் பாடமே சிறந்துகாட்டலின் அதுவே பொருத்தமும் சிறப்புமுடைத்தாம். சுடர்களீன்றுள என்னும்பாடம் சிலேடையுவமைக்கேற்பப் பொருள்கொள்ளுமிடத்து அத்துணை சிறந்துகாட்டாமையின், அது பொருத்தமும் சிறப்புமின்றாம். சிலேடையுவமைக்கேற்பச் 'சுடரிரண்டுள' என்பதற்குப் பொருள்கொள்ளுமிடத்து மண்டபத்தின்கண் தசரதன் சனகனென்னுஞ் சுடர்களிரண்டுள்ளன என்றும், அண்டத்தின்கண் ஞாயிறுந் திங்களுமாகிய சுடர்களிரண்டுள என்றும் பொருள்கொள்க. சுடரிரண்டுள என்பதற்கு உவமைபாகப் பொருள்கூறலும் பொருந்தும். தசரதன்

சனகனென்னுமிருவரையும் ஞாயிறுந் திங்களுமாக உருவகித்தது எது பற்றியெனின், பேரரசனாகிய தசரதன், தானேவிளங்கும் பேரொளியாகிய ஞாயிறுபோலத் தானே விளங்கும் பேரொளியுடையனாயும், சிற்றரசனாகிய சனகன், தானேவிளங்கமாட்டாது ஞாயிறுன்விளங்கு மதிபோலத் தானேவிளங்கமாட்டாது தசரதனான்விளங்குஞ் சிற்றொளியுடையனாயு மிருத்தல்பற்றியேயாம். தசரதனான்விளங்குஞ் சிற்றொளியுடையனென்றது அவ்வொளியை அவன் உவந்துழிப் பெறுதலும் காய்ந்துழி யிழத்தலுநோக்கி. பேரொளியும் சிற்றொளியுமுடைமைபற்றியே ஆசிரியர் இவ்வாறு கூறினாரென்பது, அவரே எதிர்கோட்படலத்திலே,

"வந்தன னரச னென்ன மனத்தெழு முவகை பொங்கிக்
கந்தடு களிறுந் தேருங் கவனமாக் கடலுஞ் சூழச்
சந்திர னிரவி தன்னைச் சார்வதோர் தன்மை தோன்ற
இந்திர திருவன் றன்னை யெதிர்கொள்வா னெழுந்து வந்தான்."

எனக்கூறியதனானு முணரப்படும். இற்றைக்குச் சிலவருடங்களுக்கு முன்னே தேகவியோகமடைந்தவரும், கம்பர்போக்கும் வாக்கு முணர்ந்து பொருளுரைத்தலில்வல்லவரும், நமதாசிரியருமாகிய வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்கள்கருத்து மிதுவே.

இங்கே, கம்பர் ஞாயிற்றையுந்திங்களையும் முறையே தசரதனுக்கும் சனகனுக்குமுவமை கூறியதுபோலவே சீவகசிந்தாமணியிலே திருத்தக்கதேவரும் சீவகனுக்கும் கட்டியங்காரனுக்கும் உவமைபுணர்த்தி,

"மொய்வார் குழலார் முலைப்போர்க்கள மாயமார்பிற்
செய்யோன் செழும்பொற் சரஞ்சென்றன சென்றதாவி
வெய்தா விளியா வெருவத்துவர் வாய்மடியா
மையார் விசும்பின் மதிவீழ்வது போலவீழ்ந்தான்."

எனக் கூறினார். அவர் ஞாயிற்றின்முன்னர் மதி நில்லாதேகெடுதல் போலக் கட்டியங்காரன் சீவகன்முன் எதிர்நிற்கமுடியாது கெட்டமை பற்றியும், இராக்காலத்தே இருள்பரப்ப மதியாண்டதுபோல உலகிற் கொடுங்கோல் இருள்பரப்ப அரசாண்ட தன்மைபற்றியுமே உவமை புணர்த்தினார். திருத்தக்கதேவர் உவமைபுணர்த்திய திறமையினும் கம்பர் உவமைபுணர்த்தியதிறமை மிக வியக்கற்பாலதேயாம்; என்னை?

பேராசின்பேரொளிக்கும் சிற்றரசின்சிற்றொளிக்கும் உவமைபுணர்த்திஞ ராதலின். இவ்வாறே திருத்தக்கதேவர்கூறிய வுவமைகளைக் கம்பர் கூறு மிடத்து மிக அழகுறக்கூறுவர். அதனை : சேதுசமஸ்தானவித்துவா னும், தொடக்கத்திலே செந்தமிழ்ப்பத்திரிகைக்கு அதிபராயிருந்தவரும் அறிவிற்பெரியாருமாகிய ஸ்ரீமான் ரா. ராகவையங்காரவர்கள் செந்தமிழ் ௨-ந். தொகுதி, கம். பகுதி முதலியவற்றில் வெளியிட்ட திருத்தக்க தேவரும் கம்பரு மென்னும் விஷயம் நன்குவிளக்கும். அதனைநோக்கி உணர்க.

இனி, கம்பர்கூறியவாறே கச்சியப்பசிவாசாரியரும்,

"சொற்றிறன் மேதகு சூரெனும் வெய்யோ
னுற்றிடும் வைப்பினி லோரிடை தன்னின்
மற்றொ ரிளம்பிறை வைகிய வாபோற்
கொற்றவ னுமுசு குந்த னிருந்தான்." என்றுகூறுதல்காண்க.

இனி இவ்வாறன்றி, இச்செய்யுளுக்கு அண்டங்காறுமுயர்ந்த மண் டபத்தின்கண் புயன் முதலியன அடங்கியுளவாதலின் மண்டபம் அண் டம் ஒத்தது என்று, சிலேடையுவமையாகக் கூறிப் பொருள்கோடலும் பொருத்தமுஞ் சிறப்புமின்றாம்.

---

## உலாவியற்படலம்.

"வெங்க ணானையி னன்றனி வெண்குடை
திங்கள் தங்கள் குலக்கொடி சீதையாம்
மங்கை மாமணங் காணிய வந்தருள்
பொங்கி யோங்கித் தழைப்பது போன்றதே."

இச்செய்யுளிற் கம்பர் தங்கள் குலக்கொடியெனக்கூறியது சீதையின் றந்தையாகிய சனகன் சந்திரவம்மிசத்தவனாதல்கருதி யென்றும், சனகன் சூரியகுலத்தனாதலின் அவர்கூறியது பிழையென்றும் கம்பர் கூறிய கருத்துணராது மறுத்துரைத்தனர் சிலர். கம்பர் சந்திரனும் சீதையும் ஒருகுலத்திற் பிறந்தவாதல்பற்றித் தங்கள்குலக்கொடி யென்றாரன்றிச் சந்திரவம்மிசமென்று கூறினாரல்லர். தன்குலக்கொடி யென்னாது தங்கள்குலக்கொடி யென்றபாடமே அதற்குச் சான்றாகும்.

திருவும் சந்திரனும் பாற்கடலிற்பிறந்தமைபற்றித் திருவின் அவதாரத்த ளாகிய சீதையையும் திருவாகக்கருதித் தங்கள்குலக்கொடியென்றார்.

இங்ஙனமே,

"குன்றம்மாடக்கோவினளிக்குங்கடலன்றி
அன்றம்மாடத்தும்பாளிக்குமமுதன்னாள்" என்றும்,

"மானனிநோக்கினர்தம்மங்கலக்கழுத்துக்கெல்லாம்
தானணியானபோது தனக்கணியாதுமாதோ" என்றும்,

"கருங்கடற்பள்ளியிற்கலவிநீங்கிப்போய்ப்
பிரிந்தவர்கூடினாற்பேசவேண்டுமோ" என்றும்,

பிறுண்டும் சீதையைத் திருவாகவே ஆசிரியர் கூறுதல்காண்க. பாற்கட லாகிய ஒரேகுலத்தில் சந்திரனுந் திருவும் பிறந்தமையை ஆசிரியர் மூன்னும்,

"கொடியையல்லைநீயாரையுங்கொல்கிலாய்
மடிவின்னமுதத்தொடும்வந்தனை
பிடியின்மென்னடைப்பெண்ணொடென்றுலனைச்
சுடுதியோகடற்றோன்றியதிங்களே".

என்னுஞ்செய்யுளிற் கூறுதல்காண்க. குலக்கொடியென்பதைக் குலமகள் என்பதுபோலக்கொள்ளினு மமையும்.

இங்ஙனமே கம்பர்கூறியகருத்துணராது ஆங்கிலங்கற்றபுலவர்சிலர் தம் ஆராய்ச்சிவல்மையைக்காட்டுமாறு அவர்கவிமேற் குற்றம்பாரிப்பர். முன் ஆங்கிலங்கற்றபுலவரொருவர் கம்பர்கவியைவியந்த என்மீதுகோபங் கொண்டெழுந்து கம்பர்கவியிலே கூறியதுகூறன்முதலிய பலகுற்றங்கள் விரவியுள்ளன எனக் கண்டனமொன்றுவரைந்தனர். சிற்றறிவுடையமக் கள்மேற் குற்றம்வருவது உண்மையேயாயினும் அவர்கள்கருத்துணராது அவர்செயலிற் பிழைகூறல் தக்கதன்றென்பது எமதுகருத்து.

இடைச்சங்கப்புலவர்களாற் சுவைபடச்செய்யப்பட்ட நூல்கள் பலவுள. அவைகள் கற்றவருள்ளும் நுண்மாணுழைபுலமுடையார்க்கே சுவை பயப்பனவாம். கம்பராற்செய்யப்பட்ட இராமாவதாரக் கவிகள்

யாவர்க்கும் படிக்கக்கேட்டவுடன் மிகச் சுவைபயக்கும். ஆதலின் எக்கவியினும் இராமாவதாரக்கவிகளே இக்காலத்துக்கு மிகப் பயன்படுவனவாகும். கம்பர்செய்த இராமாவதாரத்துள்ளகவிகளோ பிரதி எழுதுவோரால் பலபாடமாகத்திரிந்து பிழையுற்றன. அவற்றையெல்லாம் ஆராய்ந்து சுவைபயக்கும் உண்மைப்பாடம் இதுவெனக்காண்டல் மிக அரிது. காண்டற்கோ பலநூலுணர்ச்சியும் நுண்மாணுழைபுலமும் வேண்டும்.

அவ்விரண்டும்பெற்றுப் புலமைபடைந்த புலவர்சிலர் இப்போது நம் மதுரைமாநகரத்துக்கூடியிருக்கின்ற தமிழ்ச்சங்கத்தின்கண் உளர். அவர்கள் கம்பரியற்றிய இராமாவதாரக்கவிகளைப் பலஏட்டுப்பிரதிகளோடொப்புநோக்கி யாராய்ந்து சுவைபயக்கும் உண்மையானபாடங்களைக் கண்டு திருத்தி அச்சிற்பதிப்பித்து உலகிற்குபகரிப்பாராயின் அது பேருபகாரமாகும். அவர்கள் ஆராயமுயலின் பொருளுடையபிரபுக்கள் அவரைஆதரித்துப் பதிப்பித்தல் அதனினும் பேருபகாரமாகும். இராமாவதாரத்தின் முதற்காண்டமாகிய பாலகாண்டத்தை யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவரவர்களும், சென்னையில்வசித்த, தி. த. கனகசுந்தரம்பிள்ளையவர்களும் நன்குஆராய்ந்து திருத்தியச்சிட்டனர். அத்திருத்தம் பாலகாண்டத்தின் பெரும்பகுதியை உண்மையானபாடம் இவை எனக் காணச்செய்தன. அதனால் அவர்செயலென்றும் வியக்கத்தக்கதாகும். அவ்வாறே அயோத்தியா காண்டத்தையும் ஆராய்ந்து திருத்திவந்தனர். அம்முயற்சி கைகூடுமுன் இருவருந் தேகவியோகமாயினர். அவர் தேகவியோகமடைந்தமை தமிழ்நாடுசெய்த தவக்குறைவென்றேசொல்லலாம்.

இங்ஙனம்,

சி. கணேசையர்.

# கௌடில்யரது அர்த்தசாஸ்திரம்.

## பிரகரணம்-௧—வித்தைகளின்வகைதெரிதல்.

### ஆந்வீக்ஷிகீஸ்தாபனம்.

#### அத்தியாயம் ௨.

ஆந்வீக்ஷிகி, த்ரயீ, வார்த்தை, தண்டநீதி என்பன வித்தைகளாம். த்ரயியின் விசேஷமாகவே ஆந்வீக்ஷிகி இருப்பதால், த்ரயீ, வார்த்தை, தண்டநீதி என்பன மூன்றே வித்தைகள் என்று மனுபரம்பரையினர் கொள்வர். உலகநடையறிந்தவன் பிறரை வஞ்சித்தற்பொருட்டே த்ரயீ ஏற்பட்டதால் வார்த்தை, தண்டநீதி எனபன இரண்டே வித்தைகள் என்று பிருஹஸ்பதிபரம்பரையினர் கொள்வர். வித்தைகள் எல்லாம் தண்டநீதியை அடிப்படையாக்கிக் கொண்டிருத்தலினாலே தண்டநீதியொன்றே வித்தையென்று சுக்கிராசாரியபரம்பரையினர் கொள்வர். வித்தைகள் நான்கே என்பது கௌடில்யரது மதம். அவற்றால் தர்மார்த்தங்கள் அறியப்படும் சிறப்புப்பற்றி அவற்றிற்கு *வித்தைகள் எனப் பெயர் வழங்கியது.

சாங்கியயோக லோகாயத சாஸ்திரங்கள் ஆந்வீக்ஷிகி எனப்படும். த்ரயியில் தர்மாதர்மங்களும், வார்த்தையில் அர்த்தாநர்த்தங்களும், தண்டநீதியில் நயாபநயங்களும் கூறப்படுகின்றன. ஆந்வீக்ஷிகி இவற்றின் பலாபலங்களை நியாயமுறையால் ஆராய்ந்து உலகத்தார்க்கு உபகரிக்கின்றது.—இன்பதுன்பங்களில் புத்தியைச் சலிக்கவிடாது ஒரு நிலைப்படுத்துகின்றது. மனம், மொழி, செயல் இவற்றிற்குத் திறம் நல்குகிறது.

விநயாதிகாரமென்றமுதலதிகாரணத்தில் வித்தைகளின்வகைதெரிதலில், ஆந்வீக்ஷிகீஸ்தாபனம்என்ற இரண்டாம்அத்தியாயம் முற்றிற்று.

---

* வித்தை.—அறிவு.

## பிரகரணம் ௧—வித்தைகளின் வகைதெரிதல்

### த்ரயீஸ்தாபனம்.

#### அத்தியாயம் ௩.

ஸாமவேதம், ருக்வேதம், யசுர்வேதம் என்பன மூன்றும் த்ரயீ என்று சொல்லப்படும். அதர்வ இதிஹாஸவேதங்களும் வேதங்களேயாம். சிக்ஷை, கல்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோபிசிதம், சோதிடம் என்ற ஆறும் வேதாங்கங்களென்ப. மூன்று வேதங்களாலும் நிறுவப்பட்ட அறமானது, நால்வகை வருணம், நால்வகை ஆச்சிரமம் இவற்றிற்குரிய கடன்களை ஸ்தாபித்து உபகரிக்கின்றது.

*ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், கொடுத்தல், கோடல் என்பன பிராமணனுக்கு ஸ்வதர்மம். ஓதல், வேட்டல், ஈதல், படை வழங்குதல், குடியோம்புதல் என்பன க்ஷத்திரியனுக்கு ஸ்வதர்மம். ஓதல், வேட்டல், ஈதல், உழவு, நிரைபோம்பல், வாணிகம்என்பன வைசியனுக்கு ஸ்வதர்மம். இருபிறப்பாளரை வழிபட்டொழுகுதல், †வார்த்தை காருகத்தொழில், ‡குயிலுவத்தொழில் என்பன சூத்திரனுக்கு ஸ்வதர்மம்.

கிருஹஸ்தனுக்குரிய கடன்களாவன:—தனக்கேற்பட்ட தொழில்களால் உயிர்வாழ்தல், ஒத்தகுலத்தில் ஸகோத்திரமல்லாதவிடத்து மணம்புரிதல், §ருதுகாமியாயிருத்தல், §தென்புலத்தார், தெய்வம், விருந்து இவர்களுக்குப் பூசனை இயற்றல், ஏவலாளர் விரும்பியன கொடுத்தல், ¶எஞ்சியனவுண்ணல் என்பனவாம்.

---

*"ஓதல் வேட்டல் அவைபிறர்ச் செய்தல்—ஈதல் ஏற்றலென் றாறுபுரிந் தொழுகும்—அறம்புரியந்தணர்" [பதிற் 24] தொல்காப்பியம் பொரு—புறத்—16 (இளம்.)

† உழவு, நிரையோம்பல், வாணிகம் என்பன வார்த்தை.

‡ குயிலுவத்தொழில்—ஆடற்பாடற்றொழில்.

§ தீண்டாநாண்முந்நாளுநோக்கார் நீராடியபின்—ஈராறு நாளுமிகவற்க வென்பதே—போறிவாளர் துணிபு—(ஆசாரக்கோவை).

§ தென்புலத்தார்தெய்வம் விருந்தொக்கலுனென்றாங்—கைம்புலத்தாறோம்ப றலை (திருக்குறள் 43.)

¶ தென்புலத்தார் முதலானவர்களுக்குப் பூசனைசெய்தபின் தானுண்ணல்.

பிரமசாரிக்குரிய கடன்களாவன:— வேதமோதுதல், எரியோம்பல், நீராடல், பிக்ஷையெடுத்துண்ணல், உயிரிருக்குமளவும் ஆசிரியனை வழி பட்டொழுகுதல், ஆசிரியனில்லர்தவிடத்து—அவனது புத்திரன்மாட்டு அவ்வாறொழுகுதல், அல்லது உடன்பயில்வான்மாட்டு அவ்வா றொழுகுதல் என்பனவாம்,

வாநப்பிரஸ்தனுக்கு உரிய கடன்களாவன :—பிரமசரியம், நிலத் திடைக்கிடத்தல், சடைபுனைதல், தோலுடுத்தல், எரியோம்பல், நீராடல், தெய்வபூசை, பிதிரர்பூசை, அதிதிபூசை, காட்டிலுள்ள உணவுகோடல் என்பனவாம்.

துறவிக்கு உரிய கடன்களாவன :—ஐந்தவித்தல், தொழின் முயற்சியின்மை, இவரத்துறத்தல், அவாவின்மை, பிக்ஷையேற்றல், காட்டிற் பலவிடங்களில்வசித்தல், அகத்தூய்மை, புறத்தூய்மை, இன்னுசெய்யாமை, வாய்மை, அழுக்காறுமை, அருளுடைமை, பொறை யுடைமை என்பனவாம்.

உரிய கடன்களையாற்றில் சுவர்க்கமாதி மறுமையும் வீடுப் பெறுதல் கூடும். இவற்றை ஆற்றுவிடின் உலகத்தார் முறைபிறழ்ந்து மயங்கி நாசமடைவர்,

ஆதலால் மக்கள் ஸ்வதர்மத்தைக் கடவாதபடி அரசன் காக்க வேண்டும் ஸ்வதர்மத்தில் நிற்பவன் இம்மையினும், மறுமையினும் சுகமடைகின்றான்.

உயர்ந்த ஒழுக்கங்கள் வரையறுக்கப்பட்டுள்ளதும், வருணாச்சிரமங் கள் நிறுவப்பட்டுள்ளதும் வேதங்களால் காக்கப்படுவதுமான உலகம் செழித்து விளங்குமேயன்றி யழியமாட்டாது.

விநயாதிகாரமென்ற முதலதிகாரணத்தில் வித்தைகளின் வகை தெரிதலில் த்ரயீஸ்தாபனம் என்ற மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

G. ஹரிஹரசாஸ்திரீ,

வடமொழி நூற்பிரசுரசாலை, திருவனந்தபுரம்.

ஸ்ரீ:

# மஹாலக்ஷ்மி ஸ்தோத்திரம்.

## பரிசிற்றுறைதழுவிய பாணிப்பாட்டு.

விண்ணின்ற சோதி விரிகதிர் மண்டிலத்தின்
உண்ணின்ற தெய்வ வுருவமே—கண்ணின்

ஒளியே யொளிக்கொளியே பொன்பதும மேவும்
அளியே யளிக்குமுத லாயன்—களிகூறும்

பெண்ணரசி யேநினது பேரெழிலின் றேற்றத்தை
எண்ணி யுரைக்க விழைந்துநின்ற—விண்ணவர்கோன்

எல்லையற்ற தோர்பொருளுக் கெல்லையிடல் யாங்ஙனமென்
றல்லலுற்று னென்னு மறிஞருரை—மெல்லச்

செவியகத்துச் சேர்தலும்யான் சிந்தைநைந்தே னன்னாய்
கவியகத்துத் தேர்ந்த கலைஞர்—புவியகத்துப்

பைந்தொடி மெல்விரல்லார் பாணி யுரைக்குங்காற்
செந்திருநீ ராரென்னச் செப்புவார்—சுந்தரமாங்

தாக்கணங்கே நின்றிருவைச் சாற்றுவதென் றாலடியேன்
ஆக்க மரிப்பிரியை யாயவம்மை—நோக்கில்

தனக்குவமை தானென்பேன் றாயே சிறியேன்
மனக்கமல பீடம் வதிந்து—நினைக்கரிய

பேரெழிலைக் காட்டுவையேற் பேணுமறி விற்கெட்டுஞ்
சீர்சொலலென் னாவின் செயல்.

வானகத்தும் மண்ணகத்தும் வயங்குசுடர் நீயாயின்
கானகத்தும் பொழிலகத்துங் கருதுமெழில் நீயாயின்
ஞானகத்துக் கொண்டனநின் னளினமலர்ப் பதமாயின்
தேனகத்த வனசமொராங்றே திருப்பீட மாவதுவே;

கோபாலன் றிருமார்பிற் றுலவுமொளி நீயாயின்
பூபாலர் தடந்தோளிற் பொலிவனப்பு நீயாயின்
நாவார வழுத்துவநின் னளினமலர்ப் பதமாயிற்
பூவாரும் பதுமமொன்றோ புதுப்பீட மாவதுவே;

பொன்னீர்நெல் மணியணிசேர் புகழிளமை நீயாயின்
மின்னீர விடைமடவார் வியனெழிலு நீயாயின்
நன்னீர ருளத்தனநின் னளினமலர்ப் பதமாயின்
செந்நீர்மைக் கமலமொன்றோ திருப்பீட மாவதுவே;

எனவாங்கு,

மன்றலந்தார்க் குழலமுதை மாக்கடலிற் பிறந்தாளைக்
கன்றெறிந்த விறைமகிழுங் கனங்குழையைப் பணிந்துநின்றேன்
நின்ற வெல்லையு ணீடருள் சுரந்தென்
மனக்கண் காண வலக்கண் டுடிப்ப
உளமெனும் பீடத் துவந்து தோற்றினள்
வளரிள மதிநுதல் வயங்கொளி மலர்மகள்

ஆங்கு,

பொன்றிறங்கொள் திருமேனி பொலிவுறுநல் லெழில்கண்டேன்
குன்றனைய பயோதரத்திற் குளிர்முத்த வடங்கண்டேன்
அன்றலர்ந்த செங்கமல மங்கைமலர் மிசைக்கண்டேன்
வன்றிறற்கோ லனைச்செற்ற வச்சிரதண் டமுங்கண்டேன்;

வெண்ணிறத்த சுரிசங்கம் விளங்குதிருக் கரங்கண்டேன்
அண்ணலஞ்சேர்த் தனியாழி யமர்ந்தவிறற் கரங்கண்டேன்
புண்ணியச்செங் கருடன்மிசைப் பொருந்துதிரு வுருக்கண்டேன்
மண்ணகம்விண் ணகம்போற்றும் வைணவியைக் கண்டேனே;

கண்டுளங் களிகூர்ந் தண்டரு மவுணரும்
பாற்கடல் கடைந்த காலத் தார்த்தெழு
நஞ்சொடு மமுதொடும் நளிரிளம் பனிமதிப்
பிள்ளைப் பிறையொடு மொள்ளொளி வெள்ளைப்
புரியொடு மரம்பையர் பலரொடுந் தோற்றிய

கிள்ளை மென்மொழிக் கிளரொளி யணங்கே
வேண்டுவார் வேண்டும் வரமருள் திருவே
காண்டற் கரிய கமல வல்லி
போக மோக்ஷம் பொருந்துவிப் பவளே
யோகசா தனையா லுளத்துதிப் பவளே
ஆதியி றில்லா வானந்த நிறைவே
ஞாலகுக் குமத்துத் தோன்றிநின் றவளே
மாலளிப் பவளே மயக்கறுப் பவளே
ஞாலமே முண்ட நாதன் பூணிறை
வேலையிற் றுயில விழைவொடு மவன்செய்
வேலையைப் புரியும் விமல வல்லி
யானறி யளவையிற் றமிழ்புனைந் தேத்தினன்
கானமர் புரிகுழற் கமலைநின் றிருவடி
வாழ்கென வேத்தி வணங்கிநின் றனனால் ;

அவ்வரை,

ஆழியா னுளங்கவரு மணங்குமருள் வளஞ்சுரந்து
காழியா ரிளங்கோவின் கவிமருவு தமிழ்வாழ்க
ஊழிதோ றூழிதோ றுலவுகநற் றமிழ்நாடு
வாழியசெந் தமிழறிஞர் வாழியவென் றெனைநோக்கி,

செம்மொழிநற் றமிழ்ப்புலவ செவ்வியுற நீயுரைத்த
செம்மொழிநற் றமிழ்ப்பனுவற் செய்யுள்விலை செப்பென்றாள்;
அம்மொழியென் செவிப்படலு மகங்குழைந்து முகமலர்வுற்
றம்மொழியென் செவிப்படுத்த வன்னையடி பணிந்துரைப்பேன்,

வாழி நாரணன் சிரங்கொண் மெல்லடி
வனச வல்லியே யவ்வை பாடலைக்
கூழ ளித்துற வாடிநின்றவோர்
குறவர் மாமக ளளித்து கொண்டனள்;

முதிர மால்வரைத் தலைவ னாகிய
முடிவில் சீர்ப்புகழ்க் குமண மன்னவன்
சதுர ழிந்தபின் புலவன் வந்துறத்
தலைவி லைக்கொரு பனுவல் கொண்டனன்;

அதிய னஞ்சிபல் லாண்டு வாழ்வினை
யதிக மென்றெணு னரிய தெய்விகக்
கரிய நெல்லியின் கனியை யவ்வைசெங்
கைக்கொ டுத்தொரு கவிதை கொண்டனன்;

பனியின் மால்வரை யெல்லை யாதன்முப்
பத்தொ டெட்டியாண் டிறையு மூர்களும்
உனதெ னக்கொடுத் தும்பல் சேர்குமட்
டூரர் செந்தமிழ்ப் பாடல் கொண்டனன்;

எண்ணெந் தொன்றுநூ ருயி ரம்பொனும்
ஏற்ற பாகமும் போற்றி நல்கியே
கண்ணி நார்முடிச் சேரல் காப்பியூர்க்
காப்பி யன்றருங் கவிதை கொண்டனன்;

தோட்டி தழ்த்தொடைச் சேரர் கோமகன்
சோர்வில் மைந்தனை யூரை நல்கியே
பாட்டி தழ்த்தொடைப் பயன ளித்தசீர்ப்
பாணர் பாடிய பனுவல் கொண்டனன்;

மத்த யானையான் வளவர் கோமகன்
மன்னு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொ டாறுநூ ருயி ரம்பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டனன்;

இன்னணமுன் னுணடந்த வியல்புசில வெடுத்துரைத்தேன்
கன்னியிளந் தமிழ்க்கவியெங் கண்ணுதலைக் கீரிருளிற்
பொன்னனையார் பாற்றாதாய்ப் போக்குமெனில் விலையுமுண்டோ
பின்னுரைப்பிற் கொள்வோர்தம் பெறுமதியெங் கவிமதிப்பே;

கூழுடையார் கூழளிப்பார் கோமக்கள் பொன்னளிப்பார்
ஆழிமணி முடிவேந்த ரகனிலத்தை யெமக்களிப்பார்
கீழ்மக்கள் வசையளிப்பார் கேள்வியிலார் நகையளிப்பார்
வாழ்வளிப்பார் மாமுனிவர் மறைமுதல்வன் வீடளிப்பான்;

நீயளிப்ப தெதுவம்மா நித்திலமும் பொற்குவையும்
சேயொளிசேர் மலர்ப்பதத்தின் சிறுபூழி யாகாவே
வாசவனும் வடதிசையின் மரகதனும் பெறுநிதியம்
தேசுசெறி கால்விரல்சேர் சிறுபீலிக் கிணையாமோ;

கங்கைநீர்க் கரையடைந்தோர் கங்கையா டனைநோக்கி
யங்கைநீர்க் கிரந்துநிற்ற லறிவின்பாற் படுவதோ
சங்குசேர் திருக்கரத்தோய் தமியனே னிதயமெனும்
பங்கயத்து ணீயுறையிற் பாரிலொரு குறையுளதோ;

எனவழுத்தி யிறைஞ்சி நின்றே னிகபரத்து வருபொருளைத்
தினைபொறுத்த துணைமதியாச் சிவானந்த வருட்குரவன்
புனிதவடித்தொண்டெனுமெய்ப்பொருள்படைத்தபெருமையினேன்
வனசமலர்ச் செழுந்திருவும் வனப்பிளமை வளம்விளங்க

அணிநிற மதிமுகத் தருணகை யொளிதர
மணிமருள் செவ்வாய் மலரிதழ் விரித்துத்
தமிழ்வளம் பொலிக தமிழ்நாடு வாழ்க
அமிழ்தன தமிழ்புனை யறிஞர் வாழ்க
பனுவல்கேட் டுவந்தனன் பரிசில் கொண்மதி
வாழ்கென வொருவரை வாழ்த்துவை யாயின்
வாழுமன் னோர்க்கு மலிவள மளிப்பேன்
வீழ்கென வொருவரை விளம்புவை யாயின்
வீழுமன் னோர்பால் மேவேன் யானெனப்
பரிபுர மலர்ப் பதங் காட்டித்
திருவின் செல்வியும் அருள்வழங் கினளே.

விபுலாநந்தர்.

# செய்யுட்பொருத்தவிலக்கணம்.

(கருக—ஆம் பக்கத்தொடர்ச்சி.)

## எழுத்துப்பொருத்தம்.

4. எழுத்தின்பொருத்தமேபெழுவாய்ச்சீர்க்கண்மூன்
றைந்தேழொன்பதுவியனிலைநன்று
மிரண்டுநான்காறெட்டுச்சமனிலைவழுவாம்.

என்பது, எழுத்தின்பொருத்தமாமாறுணர்த்துகிறது. முதற்சீராக வொற்று முயிரு முயிர்மெய்யும், ஒற்றைப்பட மூன்று மைந்து மேழும் ஒன்பதுமாகவரின் அது வியனிலையாகிய நற்பொருத்தமாம். இரண்டும் நான்கும் ஆறும் எட்டுமாகவரின் அது சமனிலையாகிய வழுவாமென்க.

முதற்கண் மூவசையின் மிக்கன சீர் வாராவென்றமையானும், மூவசைச்சீரும் ஒற்றொழித் தொன்பதெழுத்தாகவாராவென்றமையானும் ஒற்று முட்படக்கொண்டவாறு காண்க.

சிறுபான்மை இரண்டெழுத்து வருதலுமுண்டு. வரலாறு:—"சிந்தாமணி"யில் "மூவா" என்பது முதற்கண் இரண்டெழுத்தாய் வந்தது.

மேற்கோள் :—

"தப்பாதமூன்றைந்தேழொன்பானறவறிலவென்
றெப்பாமுதற்சீர்க்குரைசெய்வர்—செப்புங்காற்
றண்டாதநாலாறெட்டாகாதவிர்கென்று
கொண்டாரெழுத்தின்குறி"

என்பது பாட்டியல்.

## தானப்பொருத்தம்.

5. தானமேதம்முரிணைந்து இஉவ்வுடன்
ஐஔவுஞ்சேர்வுழியைந்தாமவற்றுட்
டலைமகனியற்பெயர்த்தானமுதலாப்
பாலன்குமரனரசன்மூப்பு

மாரணமுறையெண்ணிவருமுதலெழுத்தின்
குணமீற்றிரண்டெனிற்றவிர்கவென்ப.

எ - து, தானப்பொருத்தமாமாறுணர்த்துகிறது. குற்றெழுத்தைந்தையும் அவற்றொத்தநெடிலையுங் கூட்டி இ வருந்தானத்தில் ஐயும், உவ் வருந்தானத்தில் ஒளவுஞ் சேர்த்தால் ஐந்தானமாகும்.

அவையே:அ ஆவும், இ ஈ ஐயும், உ ஊ ஒளவும், எ ஏயும், ஒ ஓவும் என்றிவை உயிராகவரினும், உயிர்மெய்யாகவரினும் எழுத்தின் றானம் ஐந்தெனக்காண்க.

இவற்றைக் கொள்ளுமாறு:–பாட்டு நாயகனியற்பெயர் முதலெழுத்தின்தானமுதற்கொண்டெண்ணி முறையே ஐந்தானங்கட்கும் பாலன், குமரன், அரசன், மூப்பு, மரணம் எனப் பெயரிட்டு மங்கலச்சொன் முதலெழுத்துமூப்பென்னுந் தானத்திலும், மரணமென்னுந் தானத்திலும் வரிற் றகாதென்று தவிர்தல்வேண்டுமென்ப.

அங்ஙனம் "இராமாயண" நாயகன் இராமனாதலின் இவருந்தானம் பாலதானமாகக்கொண்டு கம்பனெடுத்த மங்கலச்சொல்லாகிய "உலகத்"தின் முதலெழுத்துக் குமரதானமாயிற்றெனக்கொள்க. "தேம்பாவணி" நாயகன் வளவனாகையால் அ வருந் தானம் பாலதானமாகிச் சீரியவென்னும் முதற்சொற்குப்பார்க்கிற் குமரதானமாகவும் "உலகம்" என்னும் மங்கலச்சொற்குப் பார்க்கில் இராசதானமாகவும் வந்தவாறு காண்க.

மேற்கோள் :—

"குறிலைந்து நந்நெடில்கொண்டி உ ஐ ஒள சேர்ந்
தறிபாலனாதியாவைந்து —மிறைவன்பேர்
முன்னெழுத்துப்பாலனில்வைத்தெண்ணிமூப்பேமாண
மென்னுமிவைதீதென்றேயெண்."

என்பது பாட்டியல்.

## பாற்பொருத்தம்.

6. பாலே,
குறிலாணெடில்பெண்மற்றுயிராணுயிர்
மெய்பெண்ணென்மருமுளரேயவைதம்
பாவியல்கெடினுமாமற்றவையலியே.

எ - து, பாற்பொருத்தமாமா றுணர்த்துகிறது. குற்றெழுத்தெல்லாம் ஆண்பாலெனவும் நெட்டெழுத்தெல்லாம் பெண்பாலெனவும் கொள்க. அன்றியும் உயிரெல்லாம் ஆண்பாலெனவும் உயிர்மெய்யெல்லாம் பெண்பாலெனவுங் கொள்வர் பிங்கலந்தை முதலிய நூலுடையார். அவற்றுள் ஆடவரைப்புகழ ஆண்பாலெழுத்தும், மாதரைப்புகழப் பெண்பாலெழுத்தும் முதற்கண்வரிற் பாலொன்றிச் சிறப்பாமாயினும் அவையே மயங்கிவரினு மிழுக்கா. ஒற்றெழுத்து மாய்தமும் முதற்கண்வாரா. அவை யலியெனப்படும்.

மேற்கோள்.

"எண்ணுங்குறிலாணியைந்தநெடிலெல்லாம்
பெண்ணாகுமொற்றாய்தம்பேடாகும்—பெண்ணினோ
டாண்புணர்ச்சிக்கவ்வவ்வெழுத்தேமயங்கினுமா
மாண்பில்பேடென்றார்மதித்து." என்பது பாட்டியல்.

உணவுப்பொருத்தம்.

7\. உணவே, அஇஉஎகசதநபமவ
வமுதெழுத்தாகியாதிச்சீர்க்குத்
தசாங்கத்தயற்கும்தகுவனவென்ப
யாயோராரோலாலோவவற்றொற்
றளபெடைமக்குறளாய்தநச்செழுத்தே.

எ—து, உணவுப்பொருத்தமாமாறுணர்த்துகிறது. கூறியநாலுயிரும் எழெற்றும் அமுதெழுத்தெனப்படும். இவை முதற்சீர்க்கும், மலைமுதலிய தசாங்கத்தயற்குமாகும். அன்றியும், யா, யோ, ரா, ரோ, லா, லோ, ய், ர், வ் என்னும் எழுத்துக்களும், இரண்டளபெடையும் மகரக்குறுக்கமும் ஆய்தமுமெனவிவை நச்செழுத்தாகி முதற்சீர்க்கண்ணும் தசாங்கத்தினயற்கு மாகாதென்ப.

மேற்கோள் :—

"மதித்தககசதநபமவ்வோடுவவ்வு
முதித்தமைந்தாற்குற்றுயிருந்—அதித்தமுதென்
றாகிமொழிக்குத்தசாங்கத்தயலுக்குந்
தீதிலவேயென்றார்தெரிந்து. என்பது பாட்டியல்.

(தொடரும்)

ந. பத்மாவதி அம்மாள்.

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

(கசகூ-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

171. "போர்" என்ன வீங்கும், பொருப்பன்ன பொலம்கொள் திண்தோள்
மாரன் அனையான், மலர் கொய் திருந் தானை, வந்தோர்
கார் அன்ன கூந்தற் குயில் அன்னவள் கண் புதைப்ப,
"ஆர்?" என்ன லோடும், அனல் என்ன அயிர்த்து யிர்த்தாள்.

இ-ள். மேகம்போன்ற கூந்தலையுடைய, குயிலையொத்த (குரலையுடைய)வள் (ஒருத்தி), "போர்" என்றுசொல்ல (க் கேட்டவுடனே, அதைச்செய்ய எழும் ஆசையால்) பூரிக்கின்ற, வலிய தோளையுடைய, மன்மதன்போன்ற (தன் கண) வன் பூப்பறித்துக்கொண்டிருந்தவனைக் கண்பொத்த, (அவன்) "ஆர்?" என்றவுடனே, (அவனிடத்துத் தன்னைப்போல விளையாடும்மாதர் பிறர் உளர்; இல்லையாயின் இவ்வாறு கேட்டிரானென்று) சந்தேகித்து (உலை நெருப்புப்போல (க் கோபத்தால்மேனி சிவந்து, துருத்தியால் ஊதப்பட்டு உலைநெருப்பினின்று புறப்படும் காற்றுப்போலப்) பெருமூச்செறிந்தாள்.

பொலம் - அழகு. 'வீங்கும் தோள்,' 'பொருப்பு அன்ன தோள்'; 'அயிர்த்து அனல் என்ன உயிர்த்தாள்' எனக் கூட்டுக.

[ஒருமன்னன் தான் வைத்திருக்கும் ஒரு மலரைவேண்டி இரண்டு மாதர் கையேந்திநிற்க, (அம்மலரை ஒருத்திக்குக் கொடுத்தால், மற்றொருத்தி மனம்நோவாளென்று) மிக்க லோபிபோலக் கொடுக்கமாட்டானாய்க் கொடாது மறுக்கவுமாட்டானாய் வாளாநின்றுகொண்டிருந்தான்.

மற்றொருமன்னன் தன்னிடத்தே உள்ள பூக்களை இரண்டு மாதருக்குச் சமமாகப் பகுத்துக்கொடுக்க, இருவரும். ('என்னை அதிகமாக நேசிக்கவில்லை' 'என்னை அதிகமாகநேசிக்கவில்லை' யென்று)கோபங்கொண்டு அந்த மலர்களை வீசியெறிந்தார்கள்.

வேறொரு மன்னன் ஒருத்திபால் மிக்க காதல்கொண்டு, அவளொடு பழக்க மாகுதற்கு வேறு யாது செய்வதென்று தெரியானாய், "என் கையில் உள்ள மந்தாரமல்லரைப் பெற்றுக்கொண்டு உன் கையில் உள்ள மாதவிமலரைத் தருவாயா" என்று கூறி யிரந்து நின்றான்.

பின்னுமொருமன்னன், தன் அழகை நுகரவிரும்பித் தன் காதலியர் கண்கள் சூழாநிற்க, உலாவுவோன், மதநீரை யுண்ணவிரும்பி வண்டுகள் சூழாநிற்கத் திரிகின்ற யானையை ஒத்தான்.

இன்னுமொரு மன்னன், தன் கையிலே தாமரைமலரை யேந்தி, தன்காதலியர் முகக்கமலங்கள் தன்னைச் சூழ்ந்துநோக்க உலாவி, தாமரையைக் கையிலேந்தித் தாமரைக்காட்டி னிடையேசெல்லும் சூரியனைப் போன்றான்.

ஒரு மாது, எல்லாப் பூக்களும் பறிக்கப்பட்டு வெறுமையான ஒரு கொம்பை நோக்கி, இது இந் நிலைமையில் என் ஆருயிர்நாயகன் காணுதற் கினிதாயிராதென்று, அதற்குத் தன் ஆபரணங்களை அணிந்து பார்த்து மகிழ்ந்துநின்றாள்.

மற்றொருமாது ஓர் அன்னத்தைக்கண்டு, அதன் நடையைக்கண்டு, அது தன்னை உழுவென்றெண்ணியதுபோலத் தொடர்தலைக்கண்டு, அது தன்னொடு தோழமையுடையதெனக்கொண்டு, அன்புடன் அதனைநோக்கி "நீ என் தோழி" என்றாள்; பின்பு "சேலையில்லாத உன்னைக்கண்டவர்கள் இகழ்வார்கள். இதை உடுத்துக்கொள்" என்று ஒருசேலையைக்கொடுத்தாள்.

மாதர்கள் தம் உயிரென்றோ, அதனினும் இனியதென்றோ, கூந்தல் குலைதலையும் ஆடை அவிழ்தலையும் அறியாராய், மலர் எங்கே கிடைக்குமென்று தேடித் திரிவாராயினர்.]

175. யாழ்ஒக் குஞ்சொற் பொன் அனை யாள், ஓர் இகல் மன்னன்
தாழத் தாழாள்; தாழ்ந்த மனத்தாள்; தளர்கின்றாள்;
ஆழத் துள்ளும் கள்ள நினைப்பாள்; அவன் நின்ற
சூழற் கே தன் கிள்ளையை ஏவித் தொடர்வாளும்,

இ - ள். யாழ் (இசை) போலும் சொல்லையுடைய திருமகளொப்பாள் (ஒருத்தி, கணவனாகிய) மன்னன் (கோபம் தணியும்படி) பணியவும் (கோபம்) தணியாதவள், (அவன் பிரிந்துபோனபின்பு கோபம்) தணிந்த மனத்தினள் (ஆகி, அவன் பணிந்தபோது இணங்கினேமில்லையே யென்று பச்சாத்தாபப்பட்டு) வருந்துகின்றவள், (அவன்பால் வலியச்செல்ல விரும்பி அவ்வாறு சென்றால், பரிகாசத்துக் கிடமாமென்று தன் கிளியை அவன்பாற் செல்லச்சொல்லிவிட்டு, அதனைத் தேடிச்செல்லல்போலச் சென்று அவனை அடைதலே அப்பரிகாசத்தை நீக்கத்தக்க உபாயமென்றும் கருதி அக்கருத்து முகக்குறி முதலிய எவ்வாற்றானும் வெளிப்படாது மறைக்கவேண்டித் தன் நெஞ்சில் மேற்புறத்தன்றி) ஆழத்திலே நினைந்த கள்ள நினைப்பினள், அவன் நின்ற இடத்துக்கு (ச் செல்லும்படி) தன் கிளியை ஏவி (அதனை)த் தொடர்வாள் (ஆயினாள்.)

இகல் - வலி. ஆழத்து உள்ளும் - (நெஞ்சில்) ஆழத்தில் நினைக்கின்ற; உம்மை இறந்ததும் எதிரதும் தழுவியது. இப்பாட்டினும் இதன் முன்னும் பின்னும் 'ஒருத்தி இவ்வாறு செய்வாளும்' 'ஒருத்தன் இவ்வாறு செய்வானும்' எனப் பன்னிரண்டு பாட்டுக்கள் குளகமாகப் பாடி, அவையாவும் 'ஆயினார்'என்பதை அவாய்நிலையாக்கொண்டு முடிவு பெற வைத்திருப்பது காண்க. (குளகம்-"பல பாக்கள் கூடி ஒருவினை கொண்டு முடிவது." அவாய்நிலை - "ஒருபதம் தன்னோடு பொருந்திப் பொருள்முடித்தற்குரிய மற்றொரு பதத்தை வேண்டி நிற்கும் நிலை,")

176. சோலைத் தும்பி மென் குழ லாகத், தொடை மேவும்
சோலைக் கொண்ட மன்மத ஆயன் குறி உய்ப்ப,
நீலத் துண் கண் மங்கையர் சூழ, நிரை ஆவின்,
மாலைப் போதின், மால்விடை யென்ன வருவாரும்.

இ - ள். (அந்தச்) சோலையிலே வண்டோசை மெல்லியவேய்ங்குழலோசையாக, மதன (ன் ஆகிய) கோபாலன் குறித்த இடத்துக்குச் செலுத்த, (ஆடவர்கள்) மாலை நேரத்தில், பசுக்கூட்டம்போல மாதர் சூழ்ந்துவர, காளைகள்போலச் செல்வார் (ஆயினார்.)

தும்பி - வண்டு. குழல் - வேய்ங்குழல் (சிந்தாமணி). இரண்டும் அதனதன் ஓசையைக்குறித்தன, தொடை - பூமாலை; வில்நாண். கோல்-

மரக்கொம்பு; அம்பு. 'தொடை மேவும் கோல்' என்ற தொடர்க்கு 'நாணிற்பொருந்திய அம்பு'என மன்மதனுக்குப் பொருந்தவும் 'பூமாலை (சுற்றப்பட்டுப்) பொருந்திய (பசு ஓட்டும்) கோல்' என இடையனுக்குப் பொருந்தவும் பொருள்கொள்க. ஆயன் - இடையன். நீலத்து உண்கண்- நீலநிறத்தையுடைய (மை) உண்டகண்களையுடைய. நிரை - வரிசை. ஆ - பசு. ஆ நிரையின் (-பசுக்கூட்டம்போல) மங்கையர்சூழ'என மாற்றுக. மால் - பெருமை. மால்விடை - பெரிய இடபம். இப்பாட்டும் இதன் முற்பாட்டுப்போல 'ஆயினர்' என்பதை அவாய்நிலைபாகக்கொண்டு முடிந்தது.

[பூக்கொய்விளையாட்டைப் போதிய அளவு செய்து வெறுத்த மாதரும் மைந்தரும் நீர்விளையாட்டைவிரும்பித் தடாகங்களை அடைந்தார்கள்.]

---

## நீர்விளையாட்டுப்படலம்.

177. அங்கவர் பண்ணை நன்னீர் ஆடுவான் அமைந்த தோற்றம்,
கங்கைவார் சடையோன் அன்ன மா முனி கனல, மேனாள்,
மங்கையர் கூட்டத் தோடும் வானவர்க் கிறைவன் செல்வம்
பொங்கு மா கடலுட் செல்லும் தோற்றமே போன்ற தம்மா!

இ - ள். அந்தத் தடாகத்திலே (நீராடவந்த) அவர் (களுடைய கூட்டத்திலே) மகளிர்கூட்டம் நீர்விளையாட (அந்தத் தடாகத்துள்ளே செல்ல) அமைந்த காட்சி, துருவாசமுனிவர் சாபத்தினால் இந்திரனது செல்வத்தோடு - தேவமாதர்கூட்டம் கடலுட்செல்லலுற்றதோற்றத்தை ஒத்தது.

பண்ணை - மகளிர்கூட்டம். அமைந்த - பொருந்திய (பரிபாடல்). கனலல், காய்தல்போல, நெருப்பின் தொழிலாய், தாற்பரியப்பொருளாக, கோபித்தலை யுணர்த்தி, கோபித்தல்காரணமான சபித்தலைக்குறித்தது. மேனாள் - முன்னாளில். செல்வம் (கற்பகதரு, சங்கநிதி, பதுமநிதி, சிந்தாமணி, காமதேனு முதலிய) பொருள்கள்.

[ஆழநீரில் தம் நாயகர் மார்பிலும் தோளிலும் ஏந்தப்பெற்ற மாதர்கள் முறையே விட்டுணுவின் மார்பிலும் தோளிலும் வீற்றிருக்கும் திருமகளையும் வீரலக்குமியையும் போன்றனர்.

காதலர்களும் காதலியர்களும் ஒருவர்மேலொருவர் வாசனைப்பொடிகளை வீசுவாரும் பூமாலைகொண்டோச்சுவாரும் நீரை அள்ளியிறைப்பாருமாயினர்;

அந்தத் தடாகத்து மீன்களைக்கண்டு, தடாகத்துக்கும் கண்களுண்டோவென்று ஒரு மாது தன் கணவனை வினவினாள்.

மற்றொருமாது ஓடிப்பிரிந்துபோய் ஒரு தாமரைமலர்கள்நிறைந்திருந்த இடத்திலே மறைந்துகொள்ள, அவள் நாயகன்அங்கே தோன்றியவைகளுள் இது தாமரை இது முகம் என்று வேற்றுமை தெரியானாய் உற்றுப்பார்ப்பானாயினன்.

வேறொரு மாது முகமட்டும் தோன்ற நீருள் முழுக, அவள்முகம், நீரிலே தோன்றும் சந்திரபிம்பம்போல விளங்கியது.

தடாகத்தில் நீராடிய மாதர்களுடைய செவ்வாய்வெளுக்கக் கண்கள் சிவக்கப் பூசிய சந்தனகுங்குமங்கள் அழிய ஆடை அவிழ்ந்ததினால், அம்மாதர்கள் கொழுநரோடாடிய மாதர் போன்றனர்: தடாகம் கொழுநர் போன்றது.

நீராடலால், பூசியிருந்த சந்தனமுதலியன கழுவப்பெற்று விளங்கிய பெண்மணிகள் அழுக்ககற்றப்பட்ட ஒண்மணிகள் ஒத்தனர். (ஒள்மணி - பிரகாசமான ரத்தினம்).

தாமரை மேலேறிய அன்னங்கள், தங்களை நடையினால் தோல்வியடையச்செய்த மாதர்களுடைய பாதங்களுக்கு அம்மலர்கள் உவமானமாயிருக்கின்றனவென்று கோபித்து அம்மலர்களை மிதிப்பனபோலத் தோன்றின.

அலையால் தடுமாறி முழுகுகிற தாமரைமலர்கள், மாதர்முகங்களைத் தாம் ஒவ்வாமைக்கு நாணி ஒளிப்பன போன்றன.

ஒரு மன்னவன் தன் காதற்கருத்தை ஒருமாதுக்குக் கைச்சைகையாற் சொன்னான். அதனை அவள் தன்தோழிக்குக் கண்சமிக்கையாற் சொன்னாள்.

நீராட்டுமுடித்து மாதரும் மைந்தரும் கரையேறவே, தடாகம், தாமரைமலர்கள் குடிபோனது போன்றது; அன்றி நிறைந்து விளங்கிய நட்சத்திரங்கள் நீங்கிய வானத்தை ஒத்தது.

ஆடவரும் பெண்டிரும் நீராடியதைக்கண்டு, தானும் நீராடவிரும்பினன் போலச், சூரியன் மேற்றிசைக் கடலில் விழுந்து அத்தமனமானுன்.

எதிர்த்த அரசன்முன் நிற்கமாட்டாமல் தோற்று ஓடி ஒளித்திருந்த அரசன் மீளவும் போர்செய்ய வெளிப்பட்டுத்தோன்றுதல்போல மாதர் முகங்களுக்குத் தோற்றோடி யொளிததிருந்த சந்திரன் மீளவும் தோன்றினுன்]

---

## உண்டாட்டுப்படலம்-

(உண்டாட்டு – கள்ளுண்டு மகிழ்ந்து விளையாடல்)

178. கலந்தவர்க் கினியதோர் கள்ளு மாய்ப், பிரிந்
துலர்ந்தவர்க் குயிர்சுடு விடமும் ஆய், உடன்
புலந்தவர்க் குதவு செய் புதிய தூதும் ஆய்
மலர்ந்தது, நெடு நிலா, மதனன் வேண்டவே.

இ - ள். சந்திரிகையானது, (பிரியாமல்) சேர்ந்து வாழ்வார் (களாகிய காதலர்)க்கு (க் காமத்தை அதிகப்படுத்தும்) கள்ளுப்போன்றதாய், பிரிந்து வாடுவார் (ஆகிய காதலர்)க்கு (உடம்பேயன்றி) உயிரை(யும்) வெதுப்பும் விடம்போன்றதாய், ஊடல்செய்வார் (ஆகிய காதலர்)க்கு (அவர்களுடைய காமத்தை மிகுவித்து ஊடல்நீங்கிக் கூடுதற்கு) விரைவாய் உதவிசெய்யும் தூதுபோன்றதாய், மன்மதன் வேண்டிக்கொள்ள, (அவன்வேண்டுகோட் கிசைந்தாற்போல எங்கும்) பரவியது.

'ஆய்' மூன்றும் 'போன்று' என்ற பொருளுடையன. மலர்ந்தது— விரிந்தது, பரந்தது. உடன் - உடனே, அக்கணமே (சங்க அகராதி)— விரைவாக. நெடுநிலா - பெரியசந்திரிகை. நிலா கள்ளுமாய், விடமுமாய்த் தூதுமாய், மதனன் வேண்ட, மலர்ந்தது எனக் கூட்டுக.

(தொடரும்.)

வெ ப. சுப்பிரமணிய முதலியார்.

---

ஸ்ரீ:

# புத்தகமதிப்புரை.

க. பஞ்சாமிர்தம்:—இது, சென்னை மயிலாப்பூரில் ஸ்ரீமத். அ. மாதவையரவர்கள் பத்திராதிபத்தியத்தில் நடைபெற்றுவரும் ஒரு மாதாந்தரத்தமிழ்ப்பத்திரிகை. டெம்மி 90 பக்கங்களடங்கிய புத்தகமாக வெளியிடப்பெற்றுவருகிறது. இதன் முதலிரண்டுகோசுகள்வந்தன. அவற்றுள் இக்காலநிலைமைக்கேற்றபடி தமிழ்மக்கள் அறிந்துகொள்ள வேண்டிய சிறந்த பலவிடயங்கள் எழுதப்பட்டுள்ளன. அவை பத்திராதிபர் முதலிய கெண்யதையுள்ள ஆங்கிலகலாவிற்பன்னர்களால் இனிய தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. இப்பத்திரிகையின் பெயர்க்காரணத்தாலே இதிலுள்ள விடயங்கள் பலவும் இன்சுவையுடையவாமென்பது சொல்லாமலேயமையும். இது, தமிழ்மக்களின் அறிவு வளர்ச்சிக்கு மிக்க உபயோகமுடையது. இதன் வருடச்சந்தா ரூ. 5. தனிப்பிரதி அணா 8. வேண்டுவோர் ஷை பத்திராதிபரிடம் பெறலாம்.

உ. தமிழ்நாட்டுச்செல்வம்:—இது, காரைக்குடி ஹிந்துமதாபிமானசங்கத்தின் ஆறும் ஆண்டு விழாவில் சென்னை நவசக்தி ஆசிரியர் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் பேசியவிஷயங்களினின்றும் தொகுக்கப்பெற்று, ஷை சங்கத்தாரால் புத்தகரூபமாயச்சிட்டு வெளியிடப்பட்டது. இதில் தமிழ்நாடு, அதன் தொன்மை, மொழி, வாழ்வு, அரசியல், நாகரிகத்துறை, பாட்டு, சமயம், தமிழ், வேதம் முதலிய விஷயங்கள் நன்கு ஆராயப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா 1. வேண்டுவோர் ஷை சங்கத்திற் பெறலாம்.

ங. கோங்குவேள்:—இது, ஈரோட்டினின்றும் ஸ்ரீமான். தி. அ. முத்துஸாமிக்கோனாரவர்கள் பத்திராதிபத்தியத்தில் வெளியிடப்பட்டு வரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. இதில், கொங்குமண்டல சம்பந்தமான பலவகைச்சரிதங்களும், மற்றும் பொதுவான ஆராய்ச்சிவிஷயங்களும் எழுதப்பெறுகின்றன. இதன் வருஷச்சந்தா ரூ. 2–8–0. தனிப்பிரதி அணா 4. வேண்டுவோர் ஸ்ரீமான். ப. அ. ஆறுமுகம்பிள்ளையவர்கள், மானேஜர், கொங்குவேளாபீஸ், ஈரோடு என்ற விலாசத்திற் பெறலாம்.

௪. மூத்தநாயனர் திருவிரட்டைமணிமாலை :—இது, கொட்டையூர்ச் சாமிநாததேசிகர் பலமேற்கோள்களுடன் எழுதிய விரிவுரையோடு இரண்டாம்பதிப்பாக யாழ்ப்பாணம் சோதிடப்பிரகாசயந்திரசாலையிற் பதிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 3. வேண்டுவோர் ஷை யந்திரசாலையிற் பெறலாம்.

௫. நாலடியார் மூலம் :—(முதல் இருநூறுபாட்டு). இது, மயிலாப்பூர் A. K. ஸ்வாமி அண்டு கம்பேனியாரால் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. பாட்டுக்களுக்கு மேற்கோள் விளக்கமும் அரும்பத அகராதியும் எழுதப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா 8. வேண்டுவோர் ஷை கம்பெனியாரிடம் பெறலாம்.

௬. (1) மஹாத்மா காந்தி (ஜீவியசரித்திரம்), (2) நீதிதர்மம் (மஹாத்மாகாந்தி யியற்றியதன் மொழிபெயர்ப்பு), (3) ஆரோக்கியவழி (மஹாத்மாகாந்தி யியற்றியதன் மொழிபெயர்ப்பு) :—இவை மூன்றும் சென்னை திருவல்லிக்கேணி S. கணேசன் கம்பெனியில் கிடைக்கும்.

௭. மோகனு அல்லது மோசம்போன தாராநாதன் :—இது, கோயமுத்தூர் ஸ்ரீமத். K. கிருஷ்ணஸாமி ஐயரவர்களால் இயற்றப்பட்ட நவீனகம். காமக்கேடு முதலியவற்றைக் காட்டிச்செல்வது. இதன் விலை அணா 6. வேண்டுவோர் ஸ்ரீமத். சி கு நாராயணஸாமி முதலியாரவர்கள் 126 தாமஸ்வீதி, கோயமுத்தூர் என்ற விலாசத்திற் பெறலாம்.

௮. பக்திரஸபஜனுமிருதம் :—இது, கோம்பை ஜமீன்மாயினரான ஸ்ரீமான். க. திருமலைஜக்கயக்கவுடர் அவர்களியற்றிய சிவகீர்த்தனங்களடங்கியது. வேண்டுவோர் இதனைப் பதிப்பித்த கோம்பை ஜக்கதேவி கருணாவிலாசவித்யாசாலையாசிரியர் ஸ்ரீமான். R. திருமலை ஜக்கயக்கவுடரவர்களுக்கு எழுதி விலை முதலியன தெரிக.

# மணிமேகலையும் சிலப்பதிகாரமும்.

(உஉக-ம்பக்கத் தொடர்ச்சி.)

## XI. மணிமேகலையும் இளங்கோவடிகளும்.

மணிமேகலையின் பதிகத்திலே,

"இளங்கோ வேந்த னருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் டமிழ்த்திற மணிமே கலை துற
வாறைம் பாட்டினு ளறியவைத் தனனென்" என்றும்,

சிலப்பதிகாரத்தின் பதிகத்திலே,

"உரைசா லடிக ளருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன், இது,
பால்வகை தெரிந்த பதிகத்தின் மரபென்"

என்றும் கூறப்பட்டுள. சிலப்பதிகாரத்திலே,

"அவனுழை யிருந்த தண்டமிழ்ச் சாத்தன்
யானறி குவனது பட்டதென் றுரைப்போன்" என்றும்,

"அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றுவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலு
மூழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉஞ்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி கார மென்னும் பெயரா
னாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுளென
முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரிய
தடிக ணீரே யருளுகென் றற்கவர்' என்றும்,

"மண்களி நெடுவேன் மன்னவற் கண்டு
கண்களி மயக்கத்துக் காதலோ டிருந்த
தண்டமி ழாசான் சாத்தனிஃ துரைக்கும்" என்றும்,

"நன்னூற் புலவற்கு நன்கன முரைத்தாங்கு" என்றும்,

வருவனவற்றானே சிலப்பதிகாரநூலாசிரியர் மணிமேகலையையும், மணிமேகலைநூலாசிரியர் சிலப்பதிகாரத்தையுங் கேட்டனரென்று பிற்காலத்துச்சான்றோர்பல்லோருந் துணிந்துவிட்டனர்.

சிலப்பதிகாரநூலாசிரியர் இளங்கோவாகவுந் துறவியாகவும் இருந்தமைபற்றி இளங்கோ, அடிகள், இளங்கோவடிகள் என்றாங்கு வழங்கற்கே உரியராவர்.

"குடக்கோச் சேர லிளங்கோ வடிகட்கு" என்றும்,
"உரைசா லடிக ளருள" என்றும்,
"இளங்கோ வேண்மா ளுடனிருந் தருளி" என்றும்

வருவனவற்றை நோக்குக.

இளங்கோவடிகள் வேந்தராகவிருந்தது யாண்டுமின்மையின் அவரை இளங்கோவேந்தன் என்றலுஞ் சாலாது.

இனி, இளங்கோவேந்தன் என்றது சிலப்பதிகார நூலாசிரியரையே குறிக்குமெனில் அக்குறிப்பு அடிகளின் துறவிலே மணிமேகலைப்பதிக மெழுதினார்க்கு நன்குமதிப்பெழுந்திலது என்னும் அவ்வொன்றனையே புலப்படுத்திவிடும். ஆதலின் அங்ஙனங் கூறுதலுஞ் சாலாது.

நூலரங்கேறிய களத்தைக் குறிப்பிடற்பொருட்டு அடிகள் இளங்கோவேந்தன் என்று விதந்துகூறப்பட்டனர் என்றலும் பொருந்தாது; என்னை? இளங்கோவென்றதுவே வேந்திற்கும் அமையுமாதலானும், பின்னரும் வேந்தன் என்று பெய்தல் கூறியதுகூறல் ஆகும், ஆதலின் அதனைவிடுத்து அவர்தம் புலமையைக் குறித்தற் கேற்றதொரு பிறிதொருசொல்லைப் பெய்துரைத்தலே பொருந்துமாறும், கொள்கையும், அழகும் ஆதலானும்; இளங்கோவடிகளென்னும் பிரசித்தப்பெயரைவிடுத்து வேறோரப்பிரசித்தப்பெயரை நாட்டுதலாற் போந்தபயனொன்றேனும் இன்மையானும் அங்ஙனங்கூறுதல் பொருந்தாதென்க.

இனி, ஞானவேந்தன் என்றாக்கின் அவ்வாக்குதலும் மலைகல்லி எலிபிடித்தவாறாய்த்து இகழ்ந்திடப்படுமென்க. இளங்கோவடிகளென்று வழங்கிவருபேரினுள்ளே அடிகளென்பதை விடுத்து வேந்தன் என்பதை வீணே பெய்துகொண்டு அப்பெய்துகொண்டமைக்கேற்ப ஞானம் என்னுஞ் சொல்லை அடைகொடுத்தலோ அறிவுடைப் பெரியார்த மாற்றலாகும்?

செங்குட்டுவனவையிலே ஆசிரியர் இளங்கோவடிகள் கேட்டாரென்றிருப்பின் அவ்விருப்பே அரசனவைக்களத்துப் புலவர் கேட்டார் என்னும் விதிக்கேற்புடைத்தாகும். செம்பொன்முடிபுனைந்த செங்குட்டுவனை விடுப்பதும், அடிகளுக்கு அவர்கோலத்துக்குங் கொள்கைக்கும் வழக்கிற்கும் ஒவ்வாத வேந்துப்பட்டத்தை ஏற்றுவதும், இன்ன பிறவும் பொருந்தாவென்று மறுக்க.

இளங்கோவடிகளைச் சிலப்பதிகாரம் "உரைசாலடிகள்" என்று கூறியதற்குமாறாக மணிமேகலையின் பதிகம் "இளங்கோவேந்தன்" என்று கூறுதல் ஆராயத்தக்கது.

இவற்றானே சிலப்பதிகார நூலாசிரியர் மணிமேகலையைக் கேட்டில ரென்பது வெளிப்படையாயிற்று.

நெடுஞ்செழியன் மதுரையைஆண்டுவரும்பொழுதே அவனது தம்பியாகிய 'இளங்கோ'வெற்றிவேற்செழியன்வேந்தனுகிக்கொற்கையை ஆண்டுவந்தான். ஆதலின் அவன் இளங்கோவேந்தனென்பதற்கு உரியனாயினான்.

கோவலனைக் கொலைசெய்து கொடிய கோலினனாகத் தன்னைக் கருதிக்கொண்டு புரை தீர்கற்பிற் றேவிதன்னுடன் அரசுகட்டிலிலே பாண்டியன் நெடுஞ்செழியன் றுஞ்சியபிறகு இளங்கோவேந்தனாகிய அவ் வெற்றிவேற்செழியன் அரசுகட்டிலேறினான்.

"கொற்கையி லிருந்த வெற்றிவேற் செழியன்
.... .... .... .... .... .... .... ....
புரைசெல வெறுத்த மதுரை மூதூ
ரரைசுகெடுத் தலம்வரு மல்லற் காலைத்
தென்புல மருங்கிற் றீதுதீர் சிறப்பின்
மன்பதை காக்கு முறைமுதற் கட்டிலி
னிரைமணிப் புரவி யோரேழ் பூண்ட
வொருதனி யாழிக் கடவுட் டேர்மிசைக்
காலைச் செங்கதிர்க் கடவுளே றினனென
மாலைத் திங்கள் வழியோ னேறினன்"

(சிலப். XXVII. 127-138)

என்று மாடலனால் அவ்விளங்கோ வேந்தனாகிய வெற்றிவேற்செழியன் சிறப்பிக்கப்படுதலின் அவனது சிறப்பு முதலியன தாமே போதரும்.

மணிமேகலை நிறைவேறியகாலத்திலே புகார்ச்சோழர்மாபிற்கும் உறையூர்ச்சோழர்மாபிற்கும் இளங்கோவேந்தர் என்னற்குரியோர் எவருமில்லை யென்பது பலரும் அறிந்ததே.

தண்டமிழ்ச்சாத்தனார் மதுரையிலிருந்து வருதலினாலும், அதுபொழுது அம்மதுரையை அரசாண்டுவருபவன் இளங்கோவேந்தனாகிய வெற்றிவேற்செழியன் ஆதலினாலும், அச்செழியனே செம்பொனமுடி புனைந்த செங்குட்டுவற் குமுன்னர் நாடெலாம்புகழும் நான்மறைமுற்றிய மாடலன் பொய்யாவாற்புகழும் புகழ்படைத்தவனாதலாலும், அப்படைத்தவனே இளங்கோவேந்தனென்று திடம்படவுரைத்தற்கிடம்பெற்றமையாலும், அன்றியும் பாண்டிப்பதியே செந்தமிழ்நாடாதலாலும், செந்தமிழ்சிவணிய பனுவலைச் செந்தமிழ்நாடன் அவைக்களத்தே யரங்கேற்றுதலும் ஒருசிறப்பாதலாலும், பாண்டிநாட்டுச்செந்தமிழ்க்கூட்டத்து ஈண்டிய தமிழுலகத்தோடொருங்கிருந்த பெருஞ்சிறப்புக்கருதித் தண்டமிழ்ச் சாத்தனாரை அடிகள் தமது நூலைக்கேட்குமாறு பணித்தாராதலினாலும், இளங்கோ வேந்தனென்னும் பெயரை யடிகளுக்கேற்றிடினவரது சாபப் பேறுபெறுத லொருதலையாகுமாதலாலும் அன்னபிறவற்றாலும் தண்டமிழ்ச்சாத்தனார் தமது நூலையவ் வெற்றிவேற்செழிய னவைக்களத்தே அரங்கேற்றியிருத்தல்வேண்டுமென்பது ஒருதலையாகும்.

இனி, "நன்னூற்புலவற்கு" என்று அடிகளே அருளிச்செய்திருத்தல்கொண்டு படியார்க்கு நல்லமுதம்பாலித்தருளிய அடியார்க்குநல்லாரையுள்ளிட்ட சான்றோரெல்லாரும் மணிமேகலை என்னும் நூலைத் தண்டமிழ்ச்சாத்தனார் சிலப்பதிகாரமியற்றுதற்குமுன்னரே செய்தனரென்று ஒருதலையாகக் கொண்டிட்டனர். அக்கொண்டமைக் கேற்குமாறு "நாட்டுதும் யாமோர் பாட்டுடைச்செய்யுள்" எனனும் இதனை வலிந்திழுத்துப் பொருளுரைத்துக்கொண்டு அக்கொண்டமையை வழக்காருக்கிப்போந்தனர். அப்போக்கு, சிலப்பதிகாரம் நிறைவேறியகாலத்துக்கும் ஆராய்ச்சிமுறைக்கும் அன்னபிறவற்றிற்கும்போக்காகித் தடைசெய்தலிற் பொருந்தாவென விடுக்க.

இனி, தண்டமிழ்ச்சாத்தனாரை நன்னூற்புலவரென அடிகள் விசேடித்ததற்குக் காரணந்தா னென்னையோவெனிற் கூறுதும். சாத்தனார் தம் பாக்கள் சங்கத்தொகைநூல்களிலே சேர்க்கப்பெற்றிருத்தலின் அவர் நன்னூற்புலவர் எனப்பட்டாரெனக.

மணிமேகலையையே அடிகள் குறித்தல்வேண்டுமென்று கருதியிருப்பரேல் அவர் இங்ஙனம பொதுப்படககூறி யிடர்ப்படுத்தியிருக்கவே மாட்டார். இனைதுறையில் அறஞரெல்லாரு மிரங்கி ஆராய்வாராக.

## XII. கண்ணகியம்மையின் சமயம்.

மணிமேகலை கண்ணகியம்மையைப் பௌத்த ஸமயத்தினளாகக் கூறுகின்றது.

[மணி XXVI. 35—61. என்னு மிவ்வடிகளை நோக்குக.]

அம்மையின் தந்தை, மாமன் என்னு மிவர்களும் மாதவி மணிமேகலை என்னும் இவர்களும் பௌத்தமதத்தினரெனறு மணிமேகலையுஞ் சிலப்பதிகாரமுந் தெரிவிக்கின்றன.

சிலப்பதிகாரம் கண்ணகியம்மையைப் பௌத்தமதத்தினளாக நேரேகூறவில்லை. கோவலன கண்ணகி எனனுமிவர்கள் சைனாலயங்களை வணங்கியதினும் கௌந்தியடிகளைப் பினபற்றிவந்ததினும் இவர்களின் ஸமயம் சைனமாகுமென்று சிலர் கருதுகின்றனர். கவுந்தியடிகள் வழியாகச் சைனமதக்கொள்கை நிரம்பக் கூறப்பட்டிருத்தலின், கண்ணகியம்மை சமயமும் அதுவேயென்பது பொருந்தாது. நான்மறையாளர்க்குத் தானங்கொடுத்தன் முதலாய கோவலன்செய்கைகளை நோக்குழி அவனை வைதிகமதச் சார்பினன என்று கூறுதலே தகும். இவனது தானச்செயலை அடைக்கலக்காதையுட் காண்க. கண்ணகியம்மை கோவலன் இவர்கட்கு மணச்சடங்கும் அந்தணனால் நிறைவேறியதூஉம் இதனை வலியுறுத்தாநிற்கும்.

"வானூர் மதியஞ் சகடணைய வானத்துச்
சாலி யொருமீன் றகையாளைக் கோவலன்

மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்க ணோன்பென்னை"
(சிலப். I. 50-53.)

துறவுபூண்டவர் எச்சமயத்தவரேனும் இல்லறத்தார் அவர்தம்மை வணங்கி உபசரித்த லியல்பாகும்.

மணிமேகலையின் முற்பிறப்பிலே அவளிடத்தில் ஒரு பௌத்த சாரணமுனிவன் உச்சிப்பொழுதில் ஆகாயத்தினின்றும் இறங்கிவர அவள் அவனை நோக்கி,

"அமர கேணின் றமால மாயினு
மந்தீத் தண்ணீ ரமுதொடு கொணர்கே
முண்டி யாமுன் குறிப்பின மென்றவ
னெம்மனை யுண்கே னீங்குக் கொணர்கென
வந்நா ளவனுண் டருளிய," (மணி. X. 36-40).

என்பதனையும் நோக்குக.

கௌந்தியடிகள் சார்பும், சினாலய தரிசனமும், இன்னபிறவும் கண்ணகியம்மையைச் சைனமதத்தினளாகச்செய்தல் சாலாது.

மணிமேகலையிலே அம்மைக்குக் கூறப்பட்ட பௌத்தமதச்சார்பும் தெய்வப்பிறப்பிற்குப் பலபிறப்புகள் கழிந்தபின்னரேயாதலின் அம்மை மக்கள் யாக்கையோ டிருப்புழி வைதிகசமயத்தினளாவளென்பது வெள்ளிடை விலங்கலாயிற்றெங்க.

## XIII. இருபெருநூலாசிரியர்தஞ்சமயம்.

இளங்கோவடிகள் குணவாயிற்கோட்டத் தரசு துறந்திருந்த என்னுமிவ்வடியிலேயுள்ள கோட்டம் என்றதற்கு அருகன் கோயிலென்று அடியார்க்குநல்லார் உரைபெழுதிவிட்டார். ஆதலி னவர் அடிகளையுஞ் சைனமதத்தினராக்கிவிட்டார். கோட்டம் என்பதற்குக் கோயிலென்பதுவே பொருளென்க. காஞ்சிப்புராணமுதலியவற்றையு நோக்குக. மணிமேகலை ஆசிரியர்தம் மதம் இதுவெனத் தெரிதற்கு இதுபோது சான்றுக ளொன்று மகப்பட்டில.

இவ்விருநூலாசிரியர்களும் தத்தம் நூல்களிலே கடவுள் வாழ்த்துக் கூறாதுபோந்தமையும் மேற்கூறியதை வலியுறுத்தாநிற்கும்.

## XIV. மணிமேகலையில் வடசொற்கலப்பு.

மணிமேகலையிலே தருக்கமுறை பயின்றுவரும் சமயக்கொள்கைகள் பலப்பலவிடங்களிலே நிரம்பப்பயின்றுவந்துள. அப்பயின்று வருமிடங்களிலே வடசொற்கலப்பு நனிவந்துளது. இவ்விடங்களை எத்தகையவர் கூறப்புகுந்தாலும் வடசொற்கலப்பைச் சாத்தனரினும் அக்கூறப்புகுந்தவர் குறைவுபடுத்துவர் என்பது வீணே யாகும்.

தொகைநூல்களிலே தண்ணென் றொழுக்கம்பெற்றுப் பயின்று வருஞ் சாத்தனார்பாக்களுக்கும், மணிமேகலைக்கும் வேற்றுமை என்னு மறிதலரிதே.

சிலப்பதிகாரத்தினும் சமயவிஷயங்கூறியவிடங்களிலே மணிமேகலையினும் பன்மடங்கு விஞ்சியிருத்தலை யெல்லாருமறிப.

நூற்பாவுக்குத் திலகமெனத் தொல்காப்பியம் நிற்றல்போலவே ஆசிரியப்பாவிற்குத் திலகமென இம்மணிமேகலையும் நிலைபெற்று வருகின்றதென்பது மொருதலைமுடிபெனக.

## XV. முடிவுரை.

இக்கூறியவற்றானே, முப்பெருந்தமிழுலகிலே ஒப்பெனப்பிறவொன்று மில்லாதவுயர்ச்சி வாய்ந்த விருபெரு நூல்களாகிய மணிமேகலையுஞ் சிலப்பதிகாரமும் சரிதப்போக்கானுங், கொள்கையானுந் தம்முண் மாறு பட்டனவாகா வெனபதூஉம்,—மணிமேகலையிலே வடசொற்கலப்பு மிகுந்தமைகொண்டு அது காலத்திற் பிற்பட்ட நூலாகிச் சிலப்பதிகாரங் கேட்டருளிய தண்டமிழ்ச்சாத்தனாரா லியற்றப்பட்ட தொன்றனறென் பது வழக்குரை யாகாது எனபதூஉம், சிலப்பதிகாரத்திற் கூறப்பட்ட சித்திராபதிதான நற்குணம் வாய்நதவள், மணிமேகலையிற் கூறப்பட்டாள் அஙஙனம வாய்க்கப்பெற்றிலள் எனறு கூறுதல்பொருந்தாதெனபதூஉம், மணிமேகலைக் கதைநிகழ்ச்சி இரண்டாண்டினுக்குள்ளே நிகழ்ந்திருக்க வேண்டுமென்று கருதியது வாயே யெனினும், அதனை வாயாமையாகக் கொண்டு குற்றப்படுத்தல் நற்றமெனப் படாதெனபதூஉம், சிலப்பதி காரத்திற் கூறப்பட்டதையே மெய்யென்றுகருதி மணிமேகலை நிகழ்ச்சி களை ஒருபுறந்தள்ளுதல கூடாதென்பதூஉம், மாதவி மணிமேகலை களின் குழல் களையப்பட்டதைச சிலப்பதிகாரம்போல மணிமேகலை அறிவியா திருத்தலின் அதுகுற்றமுடைத்தெனக் கருதுவது கூடா தென்பதூஉம், இவர்கூற்றுப்படி பிற்காலத்தில் மணிமேகலை யெழுதப் பட்டிருப்பின் சிலப்பதிகாரத்துக்குமாறுபட்டனவென விவராற் காட்டப் பெற்றவை அழகிய அரும்பெருங்காப்பியஞ்செய்த சாத்தனாரா லறியப் பெறாதிருத்தல் ஒருபெரு வியப்பேயாகு மென்பதூஉம், மணிமேகலை கேட்ட இளங்கோவேந்தன கொற்கையாண்ட வெற்றிவேற் செழியனேயாவ னென்பதூஉம், இன்ன பிறவும் விளங்கிக் கிடந்தமைகாண்க.

குறிப்பு:—இவ்வாராய்ச்சி தனிவிரித் தெழுதப்பட்டுச் சின்னாளில் நூல்வடிவமாகி வெளிவரும்.

K. S. நவநீதகிருஷ்ணபாரதி.

உ

# இருபெருநூலின் நிகழ்ச்சிக்குரிய காலவட்டவணை.

முதலாம் ஆண்டு வைகாசித்திங்கள்:—கண்ணகியுங் கோவலனும் மதுரை நோக்கிப் புறப்படுதல்.

" ஆடித்திங்கள்: (1) கோவலன் சாவு.

" " (2) மதுரை எரியுண்டது.

" " (3) மாதரி சாவு.

" " (4) கண்ணகி சுவர்க்கம்புக்கது.

" " (5) மாடலன் புகாருக்குப் புறப்படுதல்.

" ஆவணித்திங்கள்:—செங்குட்டுவன் இமயநோக்கி வஞ்சியிலிருந்து புறப்படுதல்.

" புரட்டாசித்திங்கள்:—(1) மாடலன் புகாரடைதல்.

" " (2) கோவலன் கண்ணகி என்பவர்கள் சுவர்க்கம்புக்கதைக்கேட்ட மாசாத்துவான் மாநாய்கன் என்பவர் துறவுபூணல்.

" " (3) அவர்தம் மனைவியரிறத்தல்.

" " (4) சித்திராபதியிடம் மணிமேகலையை ஒப்புவித்துவிட்டு மாதவி பிக்குணிஸங்கத்தைச்சார்தல்.

மூன்றும் ஆண்டு புரட்டாசித்திங்கள்:—மாதவி குழல்களைந்து துறவு பூணல்.

" ஐப்பசித்திங்கள்:—மாதவியின் துறவு முதலியவற்றைக் கேள்வியுற்ற மாடலன் கங்கையாடப் புறப்படுதல்.

நான்காம்ஆண்டு சித்திரைத்திங்கள்:-(1) கங்கைத்தென்கரையில் செங்குட்டுவனும் மாடலனும் அளவளாவுதல்.

(2) மணிமேகலை பூப்படைதல்.

நான்காம்ஆண்டு வைகாசித்திங்கள்:-(1) வஞ்சிநோக்கிச் செங்குட்டுவன் மாடலனோடு புறப்படுதல்.

(2) மணிமேகலை பிக்குணிஸங்கத்தைச்சார்தல்.

ஐந்தாம் ஆண்டு சித்திரைத்திங்கள்:—மாதவியோடு மணிமேகலை இந்திரவிழவுக்கு வாராதவிழுக்கு.

,, வைகாசித்திங்கள்:—ஊரலருரைத்தமையைச்சித்திராபதி வயந்தமாலைவழியாக மாதவிக்கறிவித்தல்.

,, தைத்திங்கள்:—மாடலனோடு செங்குட்டுவன் வஞ்சிசேர்தல்

,, பங்குனித்திங்கள்:—கண்ணகியின் உருவநிறைவு

ஆறும் ஆண்டு சித்திரைத்திங்கள்:-(1) தேவந்திகைமுதலியோர் புறப்படுதல்.

(2) கண்ணகி பிரதிட்டோற்சவமும் வேள்வியும்.

(3) புகாரைக் கடல்கொண்டது

(4) மணிமேகலை மணிபல்லவத்தைச் சார்தல்.

(5) மணிமேகலை வஞ்சிமாநகாஞ்சார்ந்து கண்ணகியை வணங்குதல்.

(6) மணிமேகலை கச்சிசார்ந்து ஆங்கமைக்கப்பட்ட மணிப்பல்லவத்தில் தீவதிலகைக்கும், மணிமேகலா தெய்வத்துக்கும் கோயில்கள் சமைப்பித்தல்.

,, வைகாசித்திங்கள்:-(1) மணிமேகலை கச்சியிலாருயிரருத்தி வருதல்.

(2) மணிமேகலை தவத்திறம்பூண்டு தருமங்கேட்டல்.

,, ஆடித்திங்கள்:—கண்ணகி கும்பாபிஷேகமும் தேவந்திகை முதலியோரின் வணக்கமும்.

ஈ. கி.

343. இட்டமுட னென்றலைபி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானே—முட்ட முட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்றாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ.

344. ஆர வடமு மதிசீத சந்தனமும்
ஈர நிலவு [1]மெரிவிரவும்—பாரிற்
றுதிவகையான் மேம்பட்ட துப்புரவுந் தத்தம்
விதிவகையான் வேறு படும்.

345. தலையிழந்தா னெவ்வுயிருந் தந்தான் பிதாவைக்
கொலைபுரிந்தான் [2]குற்றங்க டீர்த்தான்—உலகிற்
றனிமுதன்மை பூண்டுயர்ந்தோர் வேண்டுவரேற் றப்பாம்
வினையும் விபரீத மாம்.

346. எய்த வின்னல் வந்த போழ்தி யாவ ரேனும் யாவையும்
செய்ய வல்ல ரென்ப தோர்க சென்னெ றிக்க ணேகிட
மைய கண்ணி செய்ய பாதம் வல்ல வாய மற்றிவன்
கைக ளின்று பன்ன சாலை கட்ட வல்ல வாயவே.

---

மூன்றாவது:

# பொருளியல்.

## அரசரியல்பு.

347. நண்ணினர்க்கு [3]நண்ணார்க்கு நாடோறுங் கோடாமைத்
தண்ணியராய் வெய்யராய்த் தக்காரோ—டெண்ணிக்
கருங்கடல்சூழ் மாநிலத்தைக் காப்பதா மன்றே
இருங்கழற்கால் வேந்தர்க் கியல்பு.

**அரசர் பெருக்கற்குரிய ஆறும் கடிதற்குரிய ஏழும்,**

348. நாடிய நட்புப் பகைசெலவு நல்லிருக்கை
கூடி னரைப்பிரித்தல் கூட்டலா—றீடிலா
வேட்டங் கடுஞ்சொன் மிகுதண்டஞ் சூதுபொரு
ளீட்டங்கட் காமமிவை யேழு.

---

(343) ஔவைவாக்கென்பர். (344, 345) வீரசோ. அலங். 20உரை; தண்டி. 47. [1]மெரிவிரியும். [2]குற்றங் கடிந்தான். (346) இராமாவதாரம் (புறத்). (347) யாப். வி 94: [3]மேனோர்க்கு. (348) பு. வெ. 9, 37. உரை.

## அரசியற் சிறப்பு.

(மேசாநீசிராடி.)

349. திருக்கொண்டு பெருக்கமெய்தி வீற்றிருந்து
சுற்றங்கெடுத்து விசும்புதைவரக் கொற்றக்குடை யெடுப்பித்து
நிலனெளியப் படைபரப்பி
ஆங்காங்குக் களிறியாத்து
நாடுவளம் பெருகக் கிளைகுடியோம்பி
நற்றாய் போல வுற்றது பரிந்து
நகத்துக்குப் பகலாணிபோலவும்
மக்கட்குக் கொப்பூழ்போலவும்
உலகத்துக்கு மந்தரமேபோலவும்
நடுவுநின்று செங்கோலோச்சி
யாறில்வழி யாறுதோற்றுவித்துக்
குளனில்வழிக் குளந்தொடுவித்து
முயல்பாய்வழிக் கயல்பாயப் பண்ணியும்
களிறுபிளிற்றும்வழிப் பெற்றம்பிளிற்றக்கண்டும்
களிறூர் பலகால் சென்றுதேன் றேயவும்
தண்புனற் படப்பைத்தாகியும்
குழைகொண்டு கோழியெறிந்தும்
இழைகொண் டான்றட்டும்
இலக்கங் கொண்டு செங்காலுரை யெறிந்தும்
உலக்கைகொண்டு வாளையோச்சியும்
தங்குறை நீக்கியும் பிறர்குறை தீர்த்தும்
நாடாள்வதே யரசாட்சி.

## கொடுங்கோன்மை.

350. தற்பாடு பறவை பசிப்பப் பசையற
நீர்சூல் கொள்ளாது மாறிக் கால்பொரச்
சீரை வெண்டலைச் சிறுபுன் கொண்மூ
மழைகா லூன்று வளவயல் விளையா
வாய்மையுஞ் சேட்சென்று காக்குந் தீதுதாய்ப்
பிறவு மெல்லா நெறிமாறு படுமே
கடுஞ்சினங் கவைஇய காட்சிக்
கொடுங்கோல் வேந்தன் காக்கு நாடே.

---

(349) யாப். வி. 93. (350) ஆசிரியமாலை (புறத்)

## கல்வி.

351. எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகு—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்.

352. எழுதரிது முன்ன மெழுதியபின் னத்தைப்
பழுதறவா சிப்பரிது பண்பா—முழுதுமதைக்
கற்பரிது நற்பயனைக் காண்பரிது கண்டக்கால்
நிற்பரிது தானந் நிலை.

353. நண்ணு வார்வினை நைய நாடொறும்
நற்றவர்க்கர சாய ஞானநற்
கண்ணி னடியே யடைவார்கள் கற்றவரே.

354. கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகின்றாள்—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டா புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண்.

355. வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால்—யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லார்க்கு மொவ்வொன் றெளிது.

356. ஆற்றவுங் கற்றா ரறிவுடையா ரஃதுடையார்
நாற்றிசையுஞ் செல்லாத நாடில்லை யந்நாடு
வேற்றுநா டாகா தமவேயா மாதலால்
ஆற்றுணா வேண்டுவ தில்.

## கல்லார்.

### இரட்டையர்.

357. மூடர்முன்னே பாடன்மொழிந்தா லறிவரோ
ஆடெடுத்த தென்புலியூ ரம்பலவா—ஆடகப்பொற்
செந்திருப் பாவையணங்கைச் சிங்காரித் தென்னபயன்
அந்தகனே நாயகனானால்.

(351) குறள். 392 பரிமே. மேற். (352) தனிப்பா. (353) யாப். வி. 64. (354) தனிப்பா. (ஔவையாரென்ப) (355) தனிப்பா. (356) தொல். பொரு. 75 நச்.

## ஓதத்தகாத நாள்கள்.

358. அட்டமியி லோதினு லாசானுக் காகாது
சிட்டருக்குப் பன்னான்கு தீதாகுங்—கெட்டவுவா
வித்தைக்கு நாசமாம் வெய்ய பிரதமையிற்
பித்தரும் பேசார் பிழை.

## அறிவுடைமை.

359. இளையர் முதிய ரெனவிருபால் பற்றி
விளையு மறிவென்ன வேண்டா—இளையனுய்த்
தன்ருதை காம நுகர்தற்குத் தன்காம
மொன்ருது நீத்தா னுளன்.

## பெண்ணறிவு.

360. நுண்ணறி வுடையோர் நூலொடு பழகினும்
பெண்ணறி வென்பது பெரும்பே தைமைத்தே.

## அறிவுண்டயோர்செய்திறம்.

361. மாதர்க் கிதங்கவி வாணர்க்குச் சால வணக்கங்குரு
நாதர்க்கு நீதியொ டாசார நண்பி னயந்தவர்க்குக்
கோதற்ற வாசகம் பொய்க்குப்பொய் கோளுக்குக் கோளறிவில்
ஆதர்க் கிரட்டிப் பறிவுடை யோர்செய்யு மாண்மைகளே.

(தத்துவப்பிரகாசர்).

362. ஆயிரம் புலவோரி லொருவன் ப்ரபந்தகவி
யவரா யிரர்க்கு ளொருவ
னந்தாதி தூதுலா பரணிகோ வைக்கமக
னவரா யிரர்க்கு ளொருவன்
போயிடம் பொருனு டகபுரா ணிகனவன்
போலா யிரர்க்கு ளொருவன்
பொருட்பெருங் காப்பியம் புகல்வாக்கி மற்றவன்
போலா யிரர்க்கு ளொருவன்
பாயிரந் தருபஞ்ச [1]லட்சண விதானியிப்
படியா யிரர்க்கு ளொருவன்

---

(358) தனிப்பா. (359) பெரும்பொருள்விளக்கம் (புறத்). (360) நன் 264 மயிலை. (361) தனிப் பா. (362) தமிழ் நா. 229. [1]லட்சணவி தரணனிப்.

பரசமய தர்க்கரால் பகர்வாதி மற்றுமப்
படியா யிரர்க்கு ளொருவன்
தேயமெண் டிசைபாவு தேசிகோத் தமனத்
திறத்தா யிரர்க்கு ளொருவன்
சிவனைத் துதித்துண் டுடுத்துக் கொடுத்திடுந்
தெய்வச் சிவக் கியானியே.

363. நினைவுகவி சொல்வோ மெனச்சொலிப் பலகவிதை
நினைவினைத் திருடி வையோம்
நீடுலகின் மனிதரைப் பாடிலோ நாமென்று
நீள்வசைகள் பாட வறியோம்
பினையிளைய நாவல ருடன்பங்கு பேசிப்
ப்ரபந்தங்கள் பாடிக் கொடோம்
பேசுவது தேவார மேயலால் வாய்க்கெளிய
பேய்க்கிரந் தங்கள் பேசோம்
[1]இனிமைதரு குலத்துக் குருக்களை மறந்தெட்
டிடங்களிற் றீட்சை போகோம்
இட்டசிறு பேர்மாற்றி மாதமொரு பேரிட்
டழைக்ககா மிருமாந் திரோம்
தனியிருந் தெம்மைப் புறங்கூறு வார்பாடு
தயனியக் கவிபா டுவோம்
[2]சமணூல் களைப்பொரு ளெனக்கொளோந்
திருஞான சம்பந்த ரடியர்நாமே.

## ஆடம்பரகவி.

(ஔவையார்.)

364. விரக ரிருவர் புகழ்வாரும் வேண்டும்
விரனிறைய மோதிரங்கள் வேண்டும்—அரையிலொரு
பஞ்சேனும் பட்டேனும் [3]வேண்டு மவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனு நன்று.

## நியகவி.

365. போற்றினும் போற்றுவர் பொருள்கொ டாவிடிற்
றூற்றினுந் தூற்றுவர் சொன்ன சொற்களை
மாற்றினு மாற்றுவர் வன்க ணாளர்கள்
கூற்றினும் பாவலர் கொடிய ராவரே.

---

(363) தமிழ்நா. 231; [1]இனிமைதரு பூருவத் துக்குருக் களைமறந் தெட் டிடத் தினிற்றீட்சைபோய். [2]சமயநூல். (364) ஷை. 55; [3]யில்லையோ பாணிகவி. (365) தனிப்பா. (சோழன்வாக்கு.)

366. இலக்கணக் கவிஞர்சொ லின்பந் தேடுவர்
மலக்குசொற் றேடுவர் வன்க ணாளர்கள்
நிலத்துறு கமலத்தை நேடும் வண்டதீ
தலைக்குறை கமலத்தைச் சாருந் தன்மைபோல்.

## அவையத்தாரியல்பு.

367. அழுக்கா றிலாமை யவாவின்மை தூய்மை
ஒழுக்கங் குடிப்பிறப்பு வாய்மை—யிழுக்காத
நற்புலமை யோடு நடுவு நிலைமையே
கற்புடைய வெட்டுறுப்புக் காண்.

368. குடிப்பிறப்புக் கல்வி குணம்வாய்மை தூய்மை
நடுச்சொல்லு நல்லணி யாக்கங்—கெடுக்கும்
அழுக்கா றவாவின்மை யவ்விரண்டோ டெட்டும்
இழுக்கா வவையின்க ணெட்டு.

369. குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி
விழுப்பே ரொழுக்கம் பூண்டு [1]காமுற
வாய்மைவாய் மடுத்து மாந்தித் தூய்மையிற்
காத லின்பத்துத் [2]தூங்கித் தீதறு
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலும்
அழுக்கா றின்மை [3]யவா அ வின்மையென
இருபெரு நிதியமு மொருதா மீட்டுந்
தோலா நாவின் மேலோர் பேரவை
[4]யுடன்மரீஇ யிருக்கை யொருநாட் பெறுமெனிற்
பெறுகதில் லம்ம யாமே வரன்முறைத்
தோன்றுவழித் தோன்றுவழிப் புலவுப் பொதிந்து
நின்றுழி நின்றுழி ஞாங்கர் நில்லாது
நிலையழி யாக்கை வாய்ப்பவிம்
மலர்தலை யுலகத்துக் கொட்கும் பிறப்பே.

## நல்லவை.

370. நல்லவை யென்பது நாடுங் காலை
எத்துறை யானு மிருவரு மியம்பும்
அத்துறை வல்லோ ரறனொடு புணர்ந்தோர்
மெய்ப்பொருள் கண்டோர் மிக்கவை யோர்ப்போர்

---

(366) தனிப்பா. (367) வீரசோ. பொருட். 19 மேற். (368) பு. வெ. 8. 19 மேற். (369) ஆசிரியமாலை (புறத்); தொல். பொரு. 76; [1]நாளினும். [2]துடங்கி. [3]யவாவின்மை யென்றுங். [4]உடனய விருக்கை யொருநா ளாமெனின். (370) யாப். வி. 96.

கற்றவர் கல்விக் கடாவிடை யறிவோர்
செற்றமுஞ் சினமுஞ் சேரா மனத்தோர்
முனிவொன் றில்லோர் மூர்க்க ரல்லோர்
இனிய முகத்தோ ரிருந்துரை கேட்போர்
[1]வேந்த னொருவற்குப் பாங்கு படினும்
தாந்தா மொருவர்கட் பாங்கு படாதோர்
அன்னோர் முன்னர்க் கூறிய பொழுதிற்
றொலையு மாயினுந் தொலைவெனப் படாஅது
வெல்லு மாயினு மிகச்சிறப் புடைத்தே.

## தீயவை.

371. தீயவை யென்பது தெரியுங் காலைச்
சுலாவுஞ் (?) சுண்டுந் தாமேற் கொண்டு
நிலவாப் பொருள்களைக் குலவி யெடுத்தாங்
குரைத்தவொரு வற்காய்ச் செருவென மொழிந்து
சொல்லிய துணராத வல்லவை யுணர்ந்து
வாரம் படுவது தீயவை யாகும்.

## (பூதத்தார் அவையடக்கம்).

372. திரைத்த விரிக்கிற் றிரைப்பினு வாய்போல்
உரைத்த வுரையதனைக் கேட்டு—முரைத்த
பயன்றவா செய்வார் சிலரேதந் நெஞ்சத்
தியன்றவா செய்வார் பலர்.

## மன்றிற் பரிதானம்பெறல்.

(ஔவையார் கிழியிறப்பாடியது).

373 சென்றமு துண்பதற்குச் செய்வ தரிதென்று
மன்றமு துண்பான் மனைவாழ்க்கை—முன்றிலிற்
றுச்சி லிருந்து துடைத்தெழுகண் ணீராலேழ்
எச்ச மிறுமே லிறு.

## வழக்கழிவு.

(ஷை)

374. வழக்குடையார் நிற்ப வரும்பொருள்கை வாங்கி
வழக்கை வழக்கழிவு சொல்லின்—வழக்குடையார்
சுற்றமுந் தாமுந் [2]துடைத்தெழுகண் ணீராலேழ்
சுற்ற மிறுமே லிறு.

---

[1]வேந்த னொருவர்கண் வீழ்ந் படினும். (371) யாப். வி. 95. (372) தொல். பொரு. 425. (373) தமிழ்நா. 34. (374) ஷை. 35; [2]துடைத்தழு கண்ணீரால்.

375. உள்ள வழக்கிருக்க ஊரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான்பேசி—எள்ளளவும்
கைக்கூலி தான்வாங்குங் காலறுவான் தன்கிளையும்
எச்சமிறு மென்று விறு.

376. கல்வி யுடையீர் கருங்கான கத்திடையே
நெல்லி யிலையுதிர்ந்து நிற்பதெவன்—வல்லாய்கேள்
வெல்லா வழக்கை விலைவாங்கி வெல்விக்கும்
வல்லாளன் சுற்றம்போ லாண்டு.

## தீநட்பு.

377. கெட்டே மிதுவென் னிலையென்று சார்தற்கண்
நட்டவ ரல்லார் நனிமிகு பவர்சுற்றம்
பெற்றது சொல்லிப் பெரிதிகழ்ந் தாற்றவும்
எட்டவந் தோரிடத் தேசி நிற்பவே.

378. அளவறியா னட்டவன் கேண்மையே கீழ்நீர்த்
தறியறியான் பாய்ந்தாடி யற்று.

## முயற்சி.

379. தண்டுலைறகீர் நின்ற தவத்தா லளிமருவு
புண்டரிக நின்வதனம் போன்றதால்—உண்டோ
பயின்று ருளம்பருகும் பான்மொழியாய் பார்மேன்
முயன்றுன் முடியாப் பொருள்.

## முயற்சியில்லார்.

380. தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கா லென்னு மென்னும்
யாளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்த்து விடும்பிளிற்றி யாங்கே.

## பொருள்செயல்வகை.

381. குலந்தருங் கல்வி கொணர்ந்து முடிக்கும்
அலந்த கிளைக ளழிபசி நீக்கும்
நிலம்பக வெம்பிய நீள்சுரம் போகிப்
புலம்பில் பொருடரப் புன்கண்மை யுண்டோ.

---

(375) தனிப்பா. (376) இரட்டையர்வாக்குப்போலும், ஔவைவாக்கென் றுரைப்பாரு முளர். (377) வளையாபதி (புறத்) (378) யாப்.வி. 39, (379) தண்டி. 87 மேற். (380) யாப். வி. 67; யாப். கா, செய். 7, வீரசோ, யாப். 15 மேற்; இலக், வி, 731 உரை. (381) வளையாபதி (புறத்).

## அறக்காவல்.

382. ஆர்கலி ஞாலத் தறங்காவ லாற்சிறந்த
பேரருளி னாற்குப் பெறலருமை யாதரோ
வார்திரைய மாமகர வெள்ளத்து நாப்பணும்
போர்மலைந்து வெல்லும் புகழ்.

## பண்புடைமை.

383. நகைநனி தீது துனிநன் றியார்க்கும்
பகைநனி தீது பணிந்தீயூ ரோடும்
இவைமிகு பொருளென் றிறத்த லிலரோ
வகைமிகு வானுல கெய்தி வாழ்பவே.

## பேதைமை.

384. தெண்ணீர் பரந்து திசைதொறும் போய்க்கெட்ட
எண்ணெய்கொண் டீட்ட லிவறுத லென்னெக்கும்
பெண்மனம் பேதித் தொருப்படுப் பன்னெனும்
எண்ணி லொருவ னியல்பென்னு மாறே.

## காமக்கேடு.

385. ஆசை யல்குல் பெரியாரை யருளு மிடையுஞ் சிறியாரைக்
கூச மொழியும் புருவமுங் குடில மாகி யிருப்பாரை
வாசக் குழலு மலர்க்கண்ணு மனமுங் கரிய மடவாரைப்
பூசல் பெருக்க வல்லாரைப் பொருந்தல் வாழி மடநெஞ்சே.

386. ஆனை யூற்றின் மீன்சுவையி னசுண மிசையி னளிநாற்றத்
தேனைப் பதங்க முருவங்கண் டிடுக்க ணெய்து மிவ்வனைத்தும்
கான மயிலஞ் சாயலார் காட்டிக் கௌவை விளைத்தாலும்
மான மாந்த ரெவன்கொலோ வரையா தவரை வைப்பதே.

387. ஆசைப் படுவ வருந்தவன் கல்வியல் லாப்பிறகள்
பேசப் படுவ திலமிவை யாவையு மேபிறப்பாம்
தேசத் தியற்கை தெரிந்துணர் வாருக்குச் சேயிழைமார்
பாசப் படுகுழிப் பற்றறுத் தார்விளைப் பற்றறுத்தார்.

(382) இரும்பல்காஞ்சி (புறத்). (383—384) வளையாபதி (புறத்).
(385—387) யாப், வி. 95,

388\. கொடியிடை மாதர் மேனி குவளைமல ருண்க ணென்றும்
பிடிநடை மாதர் மாண்ட நடைதானெனப் பேது செய்தும்
வடிவொடு வார்ந்த மென்றோள் வளைசேர்ந்தகை காந்த ளென்றும்
இடையிடை நின்று நின்று பலகாலு முவப்ப தென்னே.

389\. எண்ணின்றி யேதுணியு மெவ்வழி யானு மோடும்
உண்ணின் றுருக்கு முரவோருரை கோட லின்று
நண்ணின்றி யேயு நயவாரை நயந்து நிற்குங்
கண்ணின்று காம நனிகாமுறு வாரை வீழ்க்கும்.

390\. சான்றோ ருவர்ப்பத் தனிநின்று பழிப்ப காணார்
ஆன்றாங் கமைந்த குரவர்மொழி கோட லியார்
வான்றாங்கி நின்ற புகழ்மாசு படுப்பர் காமன்
தான்றாங்கி விட்ட கணைமெய்ப்படு மாயி னக்கால்.

391\. மாவென் றுரைத்து மடலேறுப மன்று தோறும்
பூவென் றெருக்கி னிணர்சூடுப புன்மை கொண்டே
பேயென் றெழுந்து பிறரார்ப்பவு நிற்பர் காம
நோய்நன் கெழுந்து நனிகாழ்க்கொள்வ தாயி னக்கால்.

392\. நக்கே விலாவிறுவர் நாணுவர் நாணும் வேண்டார்
புக்கே கிடப்பர் கனவுங்கிளை கையு மேற்பர்
துற்றூண் மறப்ப ரழிவர்நனி துஞ்ச லில்லார்
நற்றோண் மிகைபெரிது நாடறி துன்ப மாக்கும்.

393\. அரசொடு நட்டவ ராள்ப விருத்தி
அரவொடு நட்டவ ராட்டியு முண்பர்
புரிவளை முன்கைப் புனையிழை நல்லார்
விரகில ரென்று விடுத்தனர் முன்னே.

394\. வகையெழிற் றோள்க ளென்று மணிநிறக் குஞ்சி யென்றும்
புகழெழ விகற்பிக் கின்ற பொருளில்கா மத்தை மற்றோர்
தொகையெழுங் காத றன்னாற் றுய்த்தியாந் துடைத்து மென்பார்
அகையழ லழுவர் தன்னை நெய்யினா லவிக்க லாமோ.

395\. அனலெண நினைப்பிற் பொத்தி யகந்தலைக் கொண்ட காமக்
கனலினை யுவப்பு நீராற் கடையற வவித்து மென்னார்
நினைவிலாப் புணர்ச்சி தன்னா னீக்குது மென்று நிற்பார்
புனலினைப் புனலி னாலே யாவர்போ காமை வைப்பார்.

(389 393) வளையாபதி (புறத்.) (394-395) குண்டலகேசி. (புறத்).

## உழவு.

(ஔவையார்)

396. ஏரு மிரண்டுளதா யில்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுமாய்—ஊருக்குச்
சென்று வரவணித்தாய்ச் செய்வாருஞ் சொற்கேட்டால்
என்று முழவே யினிது.

## ஏரோர்பெருமை.

397. யானை நிரையுடைய [1]தேரோ மெழில்சிறந்தார்
ஏனை [2]நிரையுடை யேர்வாழ்நர்—யானைப்
படையோர்க்கு [3]வென்றி பயக்கும் பகட்டே
ருடையோர்க் கரசரோ வொப்பு.

398. வயலுழுவார் வாழ்வாருள் வாழ்வா ரயலுழுவார்
வாழ்வாருள் வாழா தவர்.

399. மேழி பிடிக்குங்கை வேல்வேந்தர் நோக்குங்கை
யாழி தரித்தே யருளுங்கை—சூழ்வினையை
நீக்குங்கை யென்று நிலைக்குங்கை நீடூழி
காக்குங்கை காராளர் கை.

## வேளாளர் நிரைகாவல்.

400. போர்வாகை வாய்த்த புரவலரின் மேதக்கா
ரேர்வாழ்ந ரென்பதற் கேதுவாஞ்—சீர்சால்
உரைகாக்கு மன்னர்க் கொளிபெருகத் தந்தம்
நிரைகாத்துத் தந்த நிதி.

## பன்னெறி.

### பிதாக்களாவார்.

401. பிறப்பித்தோன் வித்தைதனைப் பேணிக் கொடுத்தோன்
சிறப்பி னுபதேசஞ் செய்தோன்—அறப்பெரிய
பஞ்சத்தி லன்னம் பகிர்ந்தோன் பயந்தீர்த்தோன்
எஞ்சாப் பிதாக்களென வெண்.

---

(396) தமிழ்நா. 60. (397) பெரும்பொருள்விளக்கம் (புறத்); தொல்-புறத். 21 நச்; [1]தேரோ ரினுஞ்சிறந்தோர். [2]நிரையுடைய. [3]நன்றி. (398) யாப். வி. 96. (399) கம்பர்வாக்கென்பர். (400) தொல். புறத். 21 நச். (401) தனிப்பா.

(ஔவையார்).

### இதனின் இது நன்றெனல்.

402. எசி யிடலி னிடாமையே நன்றெதிரிற்
பேசு மனையாளிற் பேய்நன்று—நேசமிலா
வங்கணத்தி னன்று வலியபகை வாழ்விலாச்
சங்கடத்திற் சாதலே நன்று.

### இன்ன இன்னவை அழகாம் எனல்.

403. சரதந் தனிலிளைத்த தோகை சுகிர்த
விரதந் தனிலிளைத்த மேனி—நிரதங்
கொடுத்திளைத்த தாதா கொடுஞ்சமரிற் பட்ட
வடுத்துளைத்த கல்லபிரா மம்.

### இன்னாரை இன்னவிடத்துப் புகழ்க எனல்.

404. நேசனைக்கா ணாவிடத்து நெஞ்சார வேதுதித்தல்
ஆசானை யெவ்விடத்து மப்படியே—வாச
மனையாளைப் பஞ்சணையின் மைந்தர்தமை நெஞ்சில்
வினையாளை வேலைமுடி வில்.

### இன்னார்க்கு இது துரும்பு எனல்.

405. போந்த வுதாரனுக்குப் பொன்றுரும்பு சூரனுக்குச்
சேர்ந்த மரணஞ் சிறுதுரும்பாம்—ஆய்ந்த
அறிவோர்க்கு நாரி யருந்துரும்பா மில்லத்
துறவோர்க்கு வேந்தன் றுரும்பு.

### பயனற்றவை இவையெனல்.

406. மாடில்லான் வாழ்வு மதியில்லான் வாணிபநன்
ணாடில்லான் செங்கோ னடாத்துவது—கூடுங்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டு
விருந்தில்லா வீடு விழல்.

### (வேற்றெலி வெண்டுறைவகை.)

407: கல்லாதார் நல்லவையுட் கல்லேபோற் சென்றிருந்தாற்
கருமம் யாதாம்
இல்லாதார் செல்வரைக்கண் டிணங்கியே யேமுற்று
வியைவ தென்னும்

(402—406) தனிப்பாட்டுக்கள் (407) யாப். வி. 67.

பொல்லாதார் நன்கல மெய்புதைப்பப் பூண்டாலும்
பொலிவ தென்னும்
புல்லாதார் பொய்க்கேண்மை புனைந்துரைத்தா லாவதென்னே
அல்லாதார் பொய்யாவ தறிபவே லமையாதோ.

(ஔவையார் பாட்டு).

408. வெண்பா விருகாலிற் கல்லானை வெள்ளோலை
கண்பார்க்கக் கையா லெழுதானைப்—பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளே
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

இதனோடு இது நீங்குமெனல்.

409. தாயோ டறுசுவைபோந் தந்தையொடு கல்விபோஞ்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்—மாயவாழ்
வுற்றா ருடன்போ முடற்பிறப்பாற் றோள்வலிபோம்
பொற்றாலி யோடெவையும் போம்.

அட்டமத்துச் சனிபோல்வார்.

410. காலையிலே பல்கலைநூல் கல்லாத் தலைமகனும்
ஆலையெரி போன்ற வயலானும்—சால
மனைக்கட் டழிக்கு மனையாளு மூன்றுந்
தனக்கட் டமத்துச் சனி.

இவரிவர் கேடுவர் எனல்

411. நிட்டூர மாக நிதிதேடு மன்னவனும்
இட்டதனை மெச்சா விரவலனும்—முட்டவே
கூசிநிலை நில்லாக் குலக்கொடியுங் கூசிய
வேசியுங் கெட்டு விடும்.

இதற்கிது பகையெனல்.

412. இருளுக் கெரிவிளக் கென்றும் பகையே
அருளுக் கலைவாழ்க்கை யஃதும் பகையே
மருளுக்கு வாலறிவு [1]மாளாப் பகையே
பொருளுக்கஃ தின்மை பகை.

(408—411) தனிப்பா. (412) யாப். வி. 40. [1]மாயாப்.

### மதிக்கத்தகாப்பொருள்கள்.

413. துறவுளவாச் சான்றோ ரிளிவரவுந் தூய
பிறவுளவா லூன்றுறவா லூணும்—பறைகறங்கக்
கொண்டா னிருப்பக் கொடுங்குழையா டெய்வமுமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.

### குறுகத்தகாதவை.

414. வடுக ரருவாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேயெருமை யென்றிவை யாறுங்
குறுகா ரறிவுடை யார்.

### (ஔவையார் நாலுகோடி கவிபாடியது).

415. (1) மதியாதார் முற்ற மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி யுறும்.
(2) உண்ணீருண் ணீரென்றே யூட்டாதார் தம்மனையி
லுண்ணுமை கோடி யுறும்.
(3) கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி யுறும்.
(4) கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடைநாக்
கோடாமை கோடி யுறும்.

## பொய்ம்மகள்.

416. [1]ஆயத் துறைப்பிறந் தந்தணர் பால்குடித் தையிருநாள்
மாயக்கண் வேசை யிடத்தே வளர்ந்துவண் ணூறொருநாள்
ஏயப் புலவ ரிடத்தெட்டு நாள்செட்டி யேனென்றபின்
போயக்க சாலை புகுந்தனள்கா ணந்தப் பொய்ம்மகளே.

### (ஔவையார்பாடிய நேர்நிறைநில்லாத அகவல்.)

417. வையக மெல்லாம் வளவயலா வானோர்
தெய்வமா முகடு சேரி யாகக்
காணமு முத்து மணியுங் கலந்தொரு
கோடானு கோடி கொடுப்பினு மொருநாள்
ஒருபொழு தொருவனு ளொழிதல் பார்க்கும்
நேர்நிறை நில்லா தென்னுமென் மனனே
நேர்நிறை நில்லா தென்னுமென் மனனே.

---

(413) தண்டி. 38. (414) நன். 377 மயிலை. (415) தமிழ்நா. 37.
(416) தனிப்பாட்டு ; [1]ஆயத் துறைபிற் பிறந்துவந் தந்தணர் பால்குடித்து.
(417) தமிழ்நா. 36.

## பதினாறு பேறுகள்.

418. துதிவாணி வீரம் விசயஞ்சந் தானந் துணிவுதனம்
அதிதானி யஞ்சவு பாக்கியம் போக மறிவழகு
புதிதாம் பெருமை யறங்குல நோயின்மை பூண்வயது
பதினாறு பேறுந் தருவாய் மதுரைப் பராபரனே.

## புறத்திணைப்பிரிவு.

419. வெட்சி நிரைகவர்தன் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்வது வஞ்சியாம்—உட்கா
தெதிரூன்றல் காஞ்சி யெயில்காத்த னொச்சி
யதுவளைத்த லாகு முழிஞை—யதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கார்
செருவென் றதுவாகை யாம்.

## வெட்சி.

### மன்னுறுதொழில்.

420. வாள்வலம் பெற்ற வயவேந்த னேவலாற்
றாள்வல் விளையவர் தாஞ்செல்லி—னாளைக்
கணைகுர [1]னல்லாவின் கன்றுள்ளப் பாவி
னணைவது போலு மிவ்வூர்.

421. எடுத்த நிரைகொணு வென்றலுமே வென்றி
வடித்திலங்கு வைவாளை வாங்கத்—துடித்தனவே
தண்ணுர மார்புந் தடந்தோளும் வேல்விழியும்
எண்ணாத மன்னர்க் கிடம்.

### விரிச்சி.

422. நிரைகவுள் வெள்வாய்த் திரிந்துவீழ் தாடி
நரைமுதியோ [2]னின்றுரைத்த நற்சொல்—நிரையன்றி
எல்லைநீர் வைய மிறையோற் களிக்குமால்
[3]வல்லையே சென்மின் வழி.

---

(418) காளமேகப்புலவர்வாக்கென்பர். (419) வீரசோ. பொருட் 21 மேற்; பின். (420) பெரும்பொருள்விளக்கம் (புறத்); தொல். பொருளதி. 58. [1]நல்லாத்தன் கன்றுள்ளப் பாலீ. (421) தண்டி. 39. (422) பெரும் பொருள்வி. (புறத்); முல்லைப்பாட்டு. 8-11 மேற். [2]னேற்றுரைத்த. [3]வல்லைநீர்.

## விரிச்சிவிலக்கிய வீரக்குறிப்பு.

423. நாளும் புள்ளுங் கேளா தூக்கமொ
டெங்கோ னேயின னுதவின் யாமத்துச்
[1]செங்கால் வெட்சியுந் தினையுந் தூஉய்
மறிக்குரற் குருதி மன்றுதுக ளவிப்ப
விரிச்சி யோர்த்தல் வேண்டா
எயிற்புறந் தருதும்யாம் பகைப்புல நிரையே.

## வேய்.

424. நெடுநிலையா யத்து நிரைசுவ டொற்றிப்
படுமணி யாயம் பகர்ந்தோய்—நெடிது
மனக்குரிய காதல் வயவேந்த னென்று
நினக்குரிய வாக நிரை.

## நிரைகோள்ளற்குக் கொற்றவையின் பரவுக்கடன்.

425. வந்த நிரையி னிருப்பு மணியுடன்
எந்தலை நின்றலை [2]யாந்தருது—முந்துநீ
மற்றவை பெற்று வயவேந்தன் கோலோங்கக்
கொற்றவை கொற்றங் கொடு.

## துடிநிலை.

426. நித்திலஞ்செய் பட்டமு நெற்றித் திலதமும்
ஒத்திலங்க மெய்ப்பூசி யோர்ந்துடீஇத்—தத்தம்
துடியரோ ரேர்ப்புறஞ் சூழ்ந்தார் மறவர்
குடிநிரை பாராட்டக் கொண்டு.

## செலவு.

427. கரந்தியல் காட்டுத்திப் போலப் பெரிதும்
பரந்துசென் மள்ளர் பதிந்தார்—அரந்தை
விரிந்தவியு மாறுபோல் விண்டோயத் தோன்றி
எரிந்தவியும் போலுமில் லூர்.

---

(423-424) தகடூர் யாத். தொல். பொரு 58. மேற். [1]செஙகோல், (425) பெரும்பொருள் வி. (புறத்); சிலப். 12. பூச். 331; தொல். பொரு. 53; [2]யான் றருவன், (426) தொல், பொரு. 59, (427) ஷை. ஷை., 58,